a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

மார்ச் 2013 March | இதழ் 266 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION



'தமிழர் தகவல்' விழா - 2013





23 வது ஆண்டில்
23rd Year

Growing with the Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

## வஞ்சகமில்லாத பிஞ்சு!

பாலச்சந்திரன் என்ற பாலகனை அறியாதவர்கள் இப்போது எவருமில்லை. 2009ம் ஆண்டு மே மாதம் படுகொலை செய்யப்படுகையில் அவனுக்கு வயது பன்னிரண்டு மட்டுமே.

இவனது தாயார் மதிவதனி. மண்ணுக்காக மரணத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட தமது சகோதரன் பாலச்சந்திரனின் பெயரையே தமது இளைய புதல்வனுக்குச் சூட்டி மனதைத் தேற்றினார் அந்தத் தாய். இதற்கு முழு ஆதரவாகவிருந்தவர் பாலகனின் தந்தை வேலுப்பிள்ளை பிரபாகரன்.

முள்ளிவாய்க்காலில் நிறுத்தம் கண்ட யுத்தத்தில் பாலச்சந்திரன் என்ற பன்னிரண்டு வயதுப் பாலகனும் மரணமானதாக ஒளிப்படத்துடன் செய்திகள் வந்தன.

அந்தப் பாலகனின் மரணத்தை பல்லாயிரத்துள் ஒன்றாக்கி, யுத்தத்தில் சிக்கி மரணமானவர்களில் ஒருவனாக்கித் தப்பிக் கொண்டது இலங்கையின் அராஜக அரசு.

ஆனால் இவ்வளவு விரைவாக அந்தப் பாலகனின் படுகொலை விபரம் உலகுக்குத் தெரிய வருமென்று அவர்கள் எண்ணியிருக்க மாட்டார்கள்.

திட்டமிட்ட படுகொலையொன்றைச் சரியான நேரத்தில் 'சனல் -4' அம்பலமாக்கியுள்ளது. பன்னிரு வயதுப் பாலகனின் மூன்று படங்களும் என்ன நடந்தது என்பதைச் சந்தேகத்துக்கிடமின்றி நிருபித்து நிற்கின்றன.

கோதபாயவின் படையினரிடம் பிடிபட்ட அந்தப் பாலகன் ராணுவ பங்கர் ஒன்றுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை முதலாவது படம் காட்டுகிறது. வெறும் அரைக் காற்சட்டையுடன் சாரமொன்றினால் முதுகுப் புறத்தை மூடியவாறு இருக்கும் அவனுக்கு நொறுக்குத் தீனியுடன் ஒரு 'கப்'பில் குடிப்பதற்கும் ஏதோ வழங்கப்பட்டிருக்கிறது.

வஞ்சகமில்லாத அந்தப் பிஞ்சு, கொடுத்ததைக் கொறித்துக்கொண்டு ஆவலோடு எதனையோ திரும்பிப் பார்க்கிறது.....மார்பில் துப்பாக்கி ரவைகள் துளைத்த காயங்களுடன் சடலமாக அவன் நிலத்தில் கிடப்பதை மூன்றாவது படம் காட்டுகிறது.

யுத்தத்தின்போது பொதுமக்கள் ஒருவர்கூட கொல்லப்படவில்லை என்று கூறிவந்த ராஜபக்ச சகோதரர்கள், இந்தப் பாலகனின் படுகொலையை மறைப்பதற்கு யுத்தத்தில் சிக்கி மரணமாகியிருக்கலாம் என்று கூறி, தம்மை நிர்வாணமாக்கி நிற்கின்றனர்.

ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளைக் கூறும் என்பார்கள். பாலச்சந்திரனின் படங்கள் மூன்றும் பல்லாயிரம் வார்த்தைகளை - பல லட்சம் உண்மைகளை, கோடானுகோடி யுத்தக் கொடூரங்களை அம்பலப்படுத்தி, முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு நிகழ்காலச் சாட்சியமாக நிற்கின்றனர்.

ஒரு சிறுவன் ஆயுதம் ஏந்தினால் பயங்கரவாதம் என்று கூறும் இலங்கை அரசு, ஒரு பாலகனை இலக்கு வைத்து சுட்டுப் படுகொலை செய்துவிட்டு தப்பிக்க எத்தனிக்க, சர்வதேசம் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இலங்கையைப் போர்க்குற்ற நீதிமன்றில் ஏற்ற இதனைவிட வேறென்ன சாட்சியம் வேண்டும்?

திரு எஸ். திருச்செல்வம்


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்



தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த வருடத்தின் முதலிரு மாதங்களில் புதிய அகதிகள் வருகை 70 வீதத்தால் வீழ்ச்சி

கனடாவுக்கு வரும் அகதிகளின் தொகை, இதற்கு முன்னைய ஆறு வருடங்களுடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் முதலிரு மாதங்களிலும் வாரத்துக்கு எழுபது வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளதாக குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி அறிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் அகதிக் கோரிக்கை விடயத்தில் கொண்டுவரப்பட்ட கெடுபிடி நடவடிக்கைகளே இந்த வீழச்சிக்குக் காரணமென்று அகதிகளுக்கான சேவை அமைப்புகளும் வழக்கறிஞர்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.

அகதிகள் வரவு தற்போதைய வீழ்ச்சி நிலையில் தொடருமானால், அடுத்த வருடங்களில் கனடிய மத்திய - மாகாண அரசாங்கங்கள் வைத்திய வசதி, கல்வி வழங்கல், பொநுலக் கொடுப்பனவு போன்ற சமூக உதவித் திட்டங்களால் மேலதிகமாக 420 மில்லியன் டாலர்களை மீதப்படுத்த முடியுமென்று அமைச்சர் ஜேசன் கெனி சுட்டிக் காட்டியுள்ளார்.

அகதிகள் வருகைத் தொகையில் கடந்த இரண்டு வருடங்களாக முதலாவதாக இருந்துவந்த ஹங்கேரி நாட்டினரின் எண்ணிக்கை இப்போது 98 வீதத்தினால் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த டிசம்பர் மாதம் 14ஆம் திகதி 27 நாடுகளைப் பாதுகாப்பான நாடுகளாக அறிவித்த கனடிய குடிவரவுத் திணைக்களம், அந்த நாடுகளிலிருந்து வரும் அகதிகளை சட்டப்படி நிராகரிக்க வாய்ப்பளித்தது. இதனையடுத்து இந்த நாடுகளிலிருந்து வரும் புதிய அகதிகள் தொகை பெருவீழ்ச்சி கண்டுள்ளது.

பாதுகாப்பு நாடுகள் தொகை தற்போது 35ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்படுபவர்களின் இலவச வைத்திய வசதியை புதிய நடைமுறை நிராகரித்திருப்பதும் அகதிகள் வருகை வீழ்ச்சிக்கு மற்றொரு முக்கிய காரணமென்று குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இருநூறுக்கும் அதிகமான 'தாய்' மொழிகள் கனடிய வீடுகளில் இன்று பேசப்படுகின்றன

## Canadian Cities, households increasingly multilingual

Immigration is changing the linguistic landscape of Canada's cities and households, with Asian languages leading the shift when it comes to what we speak at home, according to Statistics Canada.

The rise in immigrants coming from Asian nations has also had an impact on what Canadian speak, with languages from those regions seeing sharp increases in usage. Two thirds of those households are bilingual in an immigrant language in concert with one of Canada's two official languages.

கனடாவில் இன்று இருநூறுக்கும் அதிகமான 'தாய்' மொழிகள் பேசப்படுகின்றன. பல்வேறு இனங்களையும் சேர்ந்தவர்கள் இங்கு குடியேறியிருப்பதும், தொடர்ந்து குடியேறி வருவதும் இதற்குக் காரணம். இதனால் கனடா உண்மையாகவே ஒரு பன்மைப் பண்பாடு நாடாக மிளிர்கின்றது.

கனடாவின் உத்தியோகபூர்வ மொழிகள் ஆங்கிலமும் பிரெஞ்சும். கியுபெக் மாகாணத்தில் பிரெஞ்ச் மொழி பேசுபவர்கள் அதிகமுள்ளனர். இரண்டு உத்தியோகபூர்வ மொழிகளையும் பேசுபவர்கள் 1971ல் 13.4 வீதமாகவிருந்தனர். ஒவ்வொரு பத்தாண்டிலும் இது அதிகரித்து வந்து, 2001ஆம் ஆண்டில் 17.7 வீதமாகவிருந்தது. ஆனால், 2011ஆம் ஆண்டில் இது 17.2 வீதமாகக் குறைந்துள்ளது.

கனடாவின் உத்தியோகபூர்வ மொழிகளுக்கு அப்பால் வீட்டு மொழியாகப் பேசப்படும் முதல் பத்துக் குடிவரவாளர் மொழிகள் எண்ணிக்கை அடிப்படையில் பின்வரும் நிரலில் அமைந்துள்ளன: பஞ்சாபி, சீனம், கன்ரெனிஷ், ஸ்பானிஷ், ரகலொக், அரபிக், மன்டரின், இத்தாலியன், உருது, ஜேர்மன், பேர்சியன், ரஷ்யன், ரகலொக் ஐந்தாண்டுகளில் 64.1 வீதத்தினாலும், மன்டரின் மற்றும் கன்ரனிஷ் ஆகிய மொழிகள் முறையே 50.4 மற்றும் 46.8 வீதங்களாலும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

> Just over 20% of Canadians - 6.8 milliom - say their mother tongue is a language other than English or French, compared to 5.2 million in 2006. The sharpest increase in a language other than French or English came from Asian countries, with languages from those regions up 56%.

ஆகப்பிந்திய புள்ளிவிபரத்தின்படி, ஐந்திலொரு கனடியர் - அதாவது 6.6 மில்லியன் ஆட்கள் தங்கள் வீட்டு மொழியாக ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியைத் தவிர வேறு மொழியையே பேசுகின்றனர். இது அவர்களின் தாய்மொழியாகும்.

சீனத்து மொழிகளில் ஒன்றான மன்டரினை வீட்டு மொழியாகப் பயன்படுத்துவோர் தொகை 2206ஆம் ஆண்டுக்கும் 2011ஆம் ஆண்டுக்குமிடையே 51 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இதே காலப்பகுதியில் அரபிக், ஹிந்தி மொழிகளைப் பேசுவோர் தொகை முறையே 47, 44 வீதங்களால் அதிகரித்துள்ளது.

கனடிய சனத்தொகையில் 17. 5 வீதமானவர்கள் - அதாவது 5.8 மில்லியன் ஆட்கள் ஆகக்குறைந்தது ஏதாவது இரண்டு மொழிகளைப் பேசுபவர்களாக இன்று காணப்படுகின்றனர். இது 2006ஆம் ஆண்டை விட 14.2 வீதம் அதிகமாகும்.

கனடாவின் பிரதான நகரங்களான ஐந்தில் வன்கூவர், கல்கேரி ஆகியவற்றில் பஞ்சாப் மொழியும், மொன்றியல், ஒட்டாவா நகரங்களில் அரபிக் மொழியும் குடிவரவாளர் மொழிகளில் முதலிடம் வகிக்கின்றன.

ரொறன்ரோ நகரில் கன்ரனிஷ், பஞ்சாப், சீனம், உருது ஆகிய நான்கு மொழிகளுக்கு அடுத்ததாக தமிழ் ஐந்தாம் இடத்தில் குடிவரவாளர் மொழியாக உள்ளது.●



எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ரொறன்ரோ நகரிலும் ரொறன்ரோ பெரும்பாகத்திலும் தொலைபேசிப் பாவனையாளர்கள் தொகை அதிகரித்து வருவதால் இப்பிரதேசங்களுக்கு மேலும் இரண்டு ஆரம்ப இணைப்பு (code) இலக்கங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. ரொறன்ரோ நகரின் ஆரம்ப இணைப்பு இலக்கங்களாகத் தற்போது 416, 647 ஆகியன உள்ளன. இதனுடன் மேலதிகமாக 437 இலக்கமும் வரவுள்ளது. ரொறன்ரோ பெரும்பாகத்தில் 905 மற்றும் 289 ஆகிய இலக்கங்களுக்கு மேலதிகமாக 365 இலக்கமும் வரவுள்ளது. இதேபோன்று ஒட்டாவா, கியுபெக் நகரங்களுக்கும் தலா ஒவ்வொரு புதிய ஆரம்ப இணைப்பு இலக்கங்கள் அறிமுகமாகவுள்ளன.

கனடிய செனட்சபை உறுப்பினர்களின் பல்வேறு ஏற்றுக்கொள்ள முடியாத நடவடிக்கைகள் சம்பந்தமான செய்திகள் அண்மையில் அதிகமாக வெளிவருகின்றன. இது தொடர்பாக 'இஸ்பொஸ் ரீட்' என்ற கருத்துக் கணிப்பு நிறுவனம் கடந்த மாதம் நடத்திய மக்கள் கருத்தறிவில், செனட் சபையை ஒழிக்க வேண்டுமென்று அதிகமான கனடியர்கள் தெரிவித்துள்ளனர். 2007ம் ஆண்டை விட பத்து வீதமானவர்கள் மேலதிகமாக இதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். கருத்துக் கணிப்பில் கலந்து கொண்டவர்களில் 78 வீதமானவர்கள் செனட் சபை மீதான அதிருப்தியை நேரடியாக வெளியிட்டுள்ளனர்.

பாரிய குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களாகவும், வெளிநாடுகளின் குற்றவாளிகளாகவும் காணப்படுபவர்களை அடையாளம் கண்டு அவர்களின் குடியுரிமையை (Citizenship) ரத்துச் செய்து அவர்களை நாடு கடத்தும் வேலையை குடிவரவு அமைச்சு துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. ஒருவர் எத்தனை ஆண்டுகள் கனடாவில் குடியுரிமை பெற்று வாழ்ந்திருந்தாலும், அவரது குடியுரிமையைப் பறிமுதல் செய்து நாடு கடத்தும் உரிமையைக் கனடிய மத்திய அரசு மட்டுமே கொண்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் வாகனங்களுக்கான காப்புறுதியைச் சட்ட ரீதியாகப் பதினைந்து சத வீதத்தால் குறைக்க வேண்டுமென்று மாகாண என். டி. பி கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. இங்குள்ள காப்புறுதி நிறுவனங்களின் வருமானம் ஐம்பது சத வீதத்தினால் அதிகரித்திருக்கின்ற போதிலும், சாரதிகளின் காப்புறுதிக் கட்டணம் ஐந்து சத வீதத்தினால் அதிகரித்துள்ளதை என். டி. பி தலைவர் அன்ட்ரியா ஹோவார்த் சுட்டிக்காட்டியுள்ளார். ஒன்ராறியோவின் புதிய மாகாண அரசிடம் இந்த மாற்றத்தை அவர் எதிர்பார்க்கின்றார்.

கனடாவில் வாரத்துக்கு ஐந்து நாட்களுக்கு இடம்பெறும் தபால் விநியோகத்தை மூன்று நாட்களாகக் குறைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. அதேசமயம், நாடு முழுவதுமுள்ள சுமார் 6,500 தபாலகங்களை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனால் பல்லாயிரம் ஊழியர் வேலையிழக்கும் அபாயமும் உள்ளது. 'கனடா போஸ்ட்' என்னும் கனடிய தபால் கூட்டுத்தாபனம் 327 மில்லியன் டாலர் நட்டத்தைச் சந்தித்ததற்கு மின்னஞ்சல், ஸ்கைப், கூரியர் சேவைகளைப் பொதுமக்கள் அதிகளவில் பயன்படுத்துவதே காரணமென்று தபால் கூட்டுத்தாபனம் சுட்டிக் காட்டியுள்ளது.

கனடிய மத்திய லிபரல் கட்சிக்கான புதிய தலைவர் தெரிவு அடுத்த மாதம் (ஏப்ரல்) 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஏப்ரல் 6ஆம் திகதி இதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பமாகி வாக்களிப்பு தொடர்ந்து நடைபெறும். இது வரை நடைபெற்ற அபேட்சகர் விவாதங்களில் ஜஸ்ரின் ரூடோ முன்னணியில் திகழ்ந்து வருகிறார். கட்சியின் புதிய தலைவராக இவர் தெரிவாரானால், அடுத்த பொதுத் தேர்தலில் லிபரல் ஆட்சியமைக்கக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக அனேக கருத்துக் கணிப்புகளும் தெரிவித்து வருகின்றன. இடைக்கால தலைவராகவிருக்கும் பொப் றே அரசியலிலிலிருந்து ஓய்வுபெறும் செய்திகளும் வெளிவந்துள்ளன.

## ரொறன்ரோ நகரின் புதிய வீதிக்கு ஜாக் லேற்றன் பெயர்

ரொறன்ரோ நகரில் புதிதாக அமைக்கப்பட்ட வீதியொன்றுக்கு என். டி. பி கட்சியின் தலைவராகவிருந்த வேளையில் மரணமான ஜாக் லேற்றன் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தப் பெயர் சூட்டும் வைபவம் கடந்த (பெப்ரவரி) மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்றது. ஜெராட் வீதியும் புரோட்வியூ விதியும் சந்திக்குமிடத்துக்கு அருகாமையிலுள்ள டொன் சிறைச்சாலைக்குப் பக்கத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள பிரிட்ஜ்பொய்ன்ற் வைத்தியசாலையை இணைக்கும் புதிய வீதிக்கே 'ஜாக் லேற்றன் வீதி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஜாக் லேற்றனின் மனைவியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒலிவியா புதிய வீதியைத் திறந்து வைத்தார். ஜாக் லேற்றனின் மகனும் நகரசபை உறுப்பினருமான மைக் லேற்றன் உட்படப் பல அரசியல்வாதிகள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

## வெளிநாட்டவருக்கு வழங்கும் இரட்டைப் பிரஜாவுரிமையை ரத்துச்செய்ய ஆலோசனை

கனடாவில் பிரஜாவுரிமை பெற்ற வெளிநாட்டவர்கள் இரட்டைப் பிரஜாவுரிமையுடன் இங்கு வாழும் வேளையில், வெளிநாடுகளில் பயங்கர குற்றச் செயல்களில் ஈடுபடுவார்களாயின், அவர்களின் இரட்டைப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்வது பற்றி கனடா ஆலோசித்து வருகின்றது. கனடாவின் தாராள இலவச மருத்துவ சேவையைப் பெறுவதற்காகவும், வெளிநாடுகளுக்குச் சென்று குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்காகவும் சிலர் கனடிய இரட்டைப் பிரஜாவுரிமையைப் பயன்படுத்துவதாக மத்திய அரசு கருதுகின்றது. இவ்வாறானவர்களின் கனடியப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்யும் சட்டம் விரைவில் அறிமுகமாகலாமெனத் தெரிகின்றது. ஆஸ்திரேலியா மற்றும் பிரித்தானிய நாடுகளில் இந்த நடைமுறை அமுலிலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NOW or LATER? Election timing being debated in Queen's Park!

# '131 நாள் பிரதமர்' கிம் காம்பலின் பரிதாப நிலை ஒன்ராறியோ முதலமைச்சர் கத்லீனுக்கும் ஏற்படுமா?

ஒன்ராறியோ மாகாணத்தின் புதிய முதலமைச்சராக கத்லீன் வின் கடந்த மாதம் 11ஆம் திகதி அதிகாரபூர்வமாகப் பதவி ஏற்றுக் கொண்டார். ஒன்ராறியோவின் 25வது முதலமைச்சர், முதலாவது பெண் முதலமைச்சர், முதலாவது பகிரங்கமான ஒரேபால் சேர்க்கை முதலமைச்சர் என்ற பல 'முதலாவது' அடைமொழிச் சிறப்புகள் இவருக்குண்டு. இந்த வருடம் மே மாதம் 21ஆம் திகதி இவர் தமது அறுபதாவது பிறந்த நாளைக் கொண்டாடவிருப்பது இன்னொரு சிறப்பு.

தமது முதலாவது அமைச்சரவையையும் அன்றைய தினமே கத்லீன் அறிவித்தார். முன்னைய முதலமைச்சராகவிருந்து பதவி விலகிய டால்ரன் மக்கன்ரியின் அமைச்சரவையை விட ஐந்து பேர் அதிகமாக - 27 பேரைக் கொண்ட அமைச்சரவையை இவர் அமைத்துள்ளார்.



கட்சித் தலைமைப் போட்டியில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட இருவரைத் தவிர மற்றைய அனைவருக்கும் அமைச்சரவையில் இடம் கொடுத்துள்ளார். அமைச்சர்களாகியுள்ளவர்களில் ஒன்பது பேர் முதன்முறையாக நியமனம் பெற்றவர்கள். கட்சித் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட சன்ட்ரா பப்பரெல்லோ, ஜெராட் கென்னடி ஆகிய இருவரும் மாகாணசபை உறுப்பினர்களாக இல்லாமையால், இவர்களை அமைச்சர்களாக்கும் வாய்ப்பு கத்லீனுக்குக் கிடைக்கவில்லை.



கத்லீன் முதலமைச்சராகப் பதவியேற்ற மறுநாளே வின்ட்சர் தொகுதியொன்றின் உறுப்பினராகவிருந்த நிதியமைச்சர் டங்கன் டுவைட் தமது இரு பதவிகளையும் ராஜினாமாச் செய்ததால், அந்தத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் சன்ட்ராவை வேட்பாளராக நிறுத்தி அவரை வெற்றிபெறச் செய்து புதிய நிதியமைச்சராக்க கத்லீன் விரும்பினார். ஆனால் சன்ட்ரா அவைகளை நிராகரித்து விட்டார். இதனால் நிதியமைச்சராகும் வாய்ப்பு மிசிசாகா தெற்குத் தொகுதி உறுப்பினரான சார்ள்ஸ் சூசாவுக்குக் கிடைத்தது.

முதமைச்சரின் நெருங்கிய சகாவும், தலைமைப் பதவித் தேர்தலில் ஆரம்பத்திலிருந்தே அவரை ஆதரித்து வந்தவருமான டெப் மத்தியுஸ் மீண்டும் சுகாதார அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதுடன், நேர்மையான ஆதரவுக்கு வெகுமதியாக துணை முதலமைச்சர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை அரசுக்குத் தலைமை தாங்கும் கத்லீன் வின் ஆட்சி எவ்வளவு காலத்துக்கு? எதிர்க்கட்சிகள் எப்போது இவரைச் சரித்து வீழ்த்தும்? இப்படியான கேள்விகள் பரவலாக அடிபடுகின்றன. தமது எதிர்ப்பை மாகாண கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் ரிம் குடாக் பகிரங்கமாக அறிவித்துவிட்டார். இப்போது தேர்தல் நடைபெற்றால் கன்சர்வேடிவ் ஒன்ராறியோவில் சிறுபான்மை அரசை அமைக்கலாமென கருத்துக் கணிப்புகளும் தெரிவிக்கின்றன.

ஆனால் மாகாண என். டி. பி கட்சியின் தலைவர் அன்ட்ரியா ஹோவர்த் மக்கள் தேவைகள் அடங்கிய பொதியைக் கத்லீனிடம் வழங்கிவிட்டு, அவைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையில் பார்த்திருக்கிறார். தற்போது தேர்தல் நடைபெறுமானால், தமது கட்சிக்குச் சாதகமாக அமையாது என்பதால் கத்லீன் அரசை உடனடியாக வீழத்த அன்ட்ரியா விரும்பவில்லை என்பது தெரிகிறது.

அரசியலில் 'உரிய நேரம்' வரும் வரை காத்திருப்பது என்பது மிகமுக்கியமானது.

1990ல் ஒன்ராறியோ மாகாண ஆட்சியிலிருந்த லிபரல் கட்சியின் முதலமைச்சர் டேவிட் பீட்டர்சன் தமது பலத்தைப் பார்க்க திடீர் தேர்தலொன்றை நடத்தினார். விளைவு, கட்சி மண்கவ்வியதுதான். பொப் றே தலைமையிலான என். டி. பி கட்சி எதிர்பாராத வெற்றியைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

தமது தொழிற் சங்கங்களிடையே செல்வாக்கிழந்த பொப் றே 1995ல் நடைபெற்ற தேர்தலில் கட்சியின் தோல்விக்குப் பொறுப்பானார். இதனால் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து அடுத்த வருடமே விலகினார்.

1995 தேர்தலில் முதலமைச்சரான கன்சர்வேடிவ் தலைவர் மைக் ஹரிசிடமிருந்து 2002ல் தலைமைப் பதவியைப் பெற்ற ஏர்ணி ஈவ்ஸ், 2003ல் நடைபெற்ற தேர்தலில் கட்சியை வெற்றி பெறச் செய்ய முடியாத நிலைக்குள்ளானார்.



பதின்மூன்று வருடங்களின் பின்னர் 2003 அக்டோபரில் லிபரல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற, டால்ரன் மக்கன்ரி முதலமைச்சரானார். மூன்று தேர்தல்களில் இவர் தொடர்ந்து வெற்றி பெற்று ஒன்பதாண்டுகள் முதலமைச்சராக-விருந்தாராயினும், கடைசித் தேர்தலில் இவரால் சிறுபான்மை அரசாங்கத்தையே அமைக்க முடிந்தது.

ஒன்ராறியோ மாகாண அரசாங்கத்தில் இடம்பெற்ற பல சீர்கேடுகளாலும், ஊழல்களாலும் மாகாணத்தின் பொருளாதாரம் சீர்குலைந்து போனதே இதற்குக் காரணம். இந்த நிலையில் தொடர்ந்து முதலமைச்சராக இருக்க விரும்பாத மக்கன்ரி, கடந்த அக்டோபரில் தீடிரென பதவியை ராஜிநாமாச் செய்தார்.

கனடியப் பிரதமராகவிருந்த பிறைன் மல்றோனியும் இப்படியானதொரு சூழ்நிலையில்தான் தமது பிரதமர் பதவியை 1993ல் துறந்ததையும், அவரது அமைச்சரவையிலிருந்த கிம் காம்பல் புதிய பிரதமரானதையும் இப்போது நினைவுபடுத்தி, ஒன்ராறியோவுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதாக அமைந்துள்ளது.

1993 ஜுன் 25ஆம் திகதி கனடாவின் 19வது பிரதமராகவும், முதலாவது பெண் பிரதமராகவும் பதவியேற்ற கிம் காம்பல், அதேயாண்டு நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் பதவியிழந்தார். அவரது கட்சி மட்டுமன்றி அவரும் வன்கூவர் மத்தி தொகுதியில் தோல்வி கண்டார். 131 நாட்கள் பதவி வகித்த, முதலாவது பெண் பிரதமர் கம் காம்பல் என்பது தனி வரலாறு.

இப்படியான ஒரு சூழ்நிலைதான் ஒன்ராறியோவின் முதலாவது பெண் முதலமைச்சரான கத்லீன் வின்னுக்கும் ஏற்படுமா? இதற்கான பதிலுக்கு நீண்ட காலம் காத்திருக்கத் தேவையில்லை.

அதற்கு 'உரிய நேரம்' எப்போது என்பதை அன்ட்ரியா ஹோவர்த் அம்மையாரே தீர்மானிப்பார்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் து. சூரியபாலன் மனநோய் நிபுணர்

# சிறுநீரகக் கற்கள்
# KIDNEY STONES

ஜனவரி மாதக் கட்டுரையின் இறுதிப் பகுதி

சிறுநீரகக் கற்கள் எங்களைத் தாக்கினால், அதற்குச் சிகிச்சை செய்வது மாத்திரமன்றி, எங்களுடைய சிறுநீரகங்களில் உண்டான கற்கள் எப்படிப்பட்டவை என்பதை அறிவது, மிக முக்கியமானதொன்று என்பதை வாசகர்கள் மறக்கக்கூடாது.

அடுத்ததாக இந்த சிறுநீரகக் கற்களால் ஏற்படும் நோய் அம்சங்களைப் பற்றி அதாவது Symptoms பற்றி சில வார்த்தைகள். சிறுநீரகத்திற்கும் Ureterக்கு இடையில் இருக்கும் பகுதியை Pelvis அல்லது Renal Pelvis என்று கூறப்படும். பொதுவாக கற்கள் Renal Pelvis இல் இருந்தால், எங்களுக்கு ஒரு வருத்தமும் காணப்பட மாட்டாது. அப்படிப்பட்ட வேளையில், எங்களுடைய சலத்தை பரிசோதனைக் கூடத்தில் சோதித்துப் பார்த்தால், அதில் Red blood cells இதை Haemataria என்று கூறுவர். இதன் அர்த்தம் சலத்தில் இரத்தம் போயிருக்கின்றது என்பதாகும். அதிகமான இரத்தம் வெளியேறினால் எங்களால் பார்த்தவுடனேயே கூறக்கூடியதாக இருக்கும். இதை Frank Haematuria என்று கூறுவர். ஆனால் சிறிதளவு இரத்தம் சலத்தில்போயிருந்தால் அதை Microscope ஆல் பரிசோதிப்பதால் தான் கண்டு பிடிக்க முடியும். கற்கள் Renal Pelvis இல் இருந்து Ureter இற்குள் போனால் அதன் காரணத்தால் எமது உடம்பில் முதுகுப் புறத்தில் விலா எலும்புகளுக்கு கீழ் உள்ள இடத்தில் தாங்க முடியாத நோ உண்டாகின்றது. இதை Renal Colic அல்லது Flank pain என்று வர்ணிக்கப்படும். இந்த மாதிரியான நோவுடன், வாந்தி எடுக்க வேண்டும் போன்ற ஒரு உணர்வையோ (Nausea) அல்லது வாந்தி எடுத்தல், வயிறு பெருத்தல் (Abdominal distensias) போன்றவற்றை அனுபவிக்கலாம்.

இந்த மாதிரியான கற்கள் சிறிய அளவாக இருந்தால் அவை Ureter இல் இருந்து, Urinary Blader ஐ அடைந்து, பின்பு Urethra மூலமாக சலத்துடன் வெளியேற்றப்படலாம். கற்கள் பெரிதாக இருந்தால் அவை Ureter உம் Bladder உம் சந்திக்கும் இடத்திலோ அல்லது Bladder இல் அல்லது Renal pelvis இல் தடைப்பட்டு நின்றுவிடக்கூடும். இந்தக் கல் ஒரு இடத்தில் இருந்து நகரும் போது தான் நாங்கள் தாங்க முடியாத நோவை அடைகிறோம். பொதுவாக Renal Pelvis காணப்படும் கற்கள் பெரிதளவாக இருந்தால், அவை நகர முடியாமல் இருக்கலாம். இதன் காரணமாக எங்களுக்கு நோ ஏற்படுவதில்லை. முதல் கூறிய நோய் அம்சங்களுடன், எங்களுடைய Urinary tract இல் Bacterial infections இருந்தால், குளிர் காய்ச்சல் (Chills + Fever), அடிக்கடி சலம் கழிக்க வேண்டும் போன்ற உணர்வையும் அனுபவிக்கலாம்.

அடுத்ததாக சிகிச்சையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். மேற்கூறிய நோய் அம்சங்களை நீங்கள் அனுபவித்தால், வைத்தியசாலைக்குச் சென்று தகுந்த சிகிச்சை பெறலாம். முன்பு கூறியபடி, சலத்தைச் சோதிப்பதாலும், X-ray, Intra Venus Pyclomia (IVP) முதலிய பரிசோதனை மூலமாகவும், எங்கு காணப்படுகின்றது, தானாகவே கல் வெளியே வரக்கூடுமோ, அல்லது சத்திர சிகிச்சை தேவையா என்பதை வைத்தியர்கள் நிர்ணயிக்க முடிகின்றது. இப்பொழுது சத்திர சிகிச்சையில் எவ்வளவோ முன்னேற்றங்கள் அடைந்து இருக்கின்றோம். ஆகவே உடம்பில் ஒரு காயமும் ஏற்படாது, Laser technology ஆல் பெரிய கற்களை சிறிய கற்களாக உடைத்து தூளாக்கி உடம்பில் இருந்து வெளியேற்ற முடிகின்றது. Urinary Bladder அல்லது Ureter இற்கும் Bladder இற்கும் இடையில் இருக்கும் சந்தியில் தடைபட்டு இருக்கும் கற்களை சத்திர சிகிச்சையினால் இலகுவாகச் அகற்றக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே வாசகர்கள் சிறுநீரகக் கற்கள் என்றவுடன் பயப்படத் தேவையில்லை. அதேவேளையில் தகுந்த வைத்திய ஆலோசனை பெற்று நலமடைய தயங்க வேண்டாம்.

அடுத்ததாக, சிறுநீரகக் கற்கள் வருவதைத் தடுப்பது எப்படி என்பதைப் பற்றி சில வார்த்தைகள். எமது உடம்பில் calcium மேலதிகமாக இருந்தால் கல்சியமும் Oxalate உம் சேர்ந்து Oxalate கற்கள் சிறுநீரகத்தில் படிவதற்கு வாய்ப்புகள் உண்டு என்பதை அறிந்தோம். இந்த மாதிரியான அதிகப்படியான கல்சியம் எமது உடம்பில் இருப்பதற்குக் காரணங்களில் ஒன்று, நாம் கல்சியம் உள்ள உணவுகளை அதிகப்படியாக உண்பதே. Hyperparathyroidism, Hypervitaminosis D - Excess intake of Vit D என்று இரு கல்சியம் அதிகமாக உடலில் காணப்படுகின்றது. சிறுநீரகக் கற்கள் உண்டாகி தவிக்கும் அனேகரில் பலர் அதிகமான கல்சியம் உள்ள உணவை உண்பதால் தான் இந்த மாதிரியான நிலையை அடைகின்றார்கள். இவர்களை Idiopathic stone formers என்று கூறுகின்றோம். கல்சியம் அதிகமாக உள்ள உணவு வகைகளான பால், தயிர், பாற்கட்டி, வெண்ணெய் போன்றவற்றை உண்பதைக் குறைக்க வேண்டும். கல்சியம் சேர்ந்து இருக்கும் மருந்து வகைகளையும் Vit D சேர்க்கப்பட்ட உணவு வகைகளையும் குறைக்க வேண்டும்.

அதிகமான தண்ணீர் அருந்துதல் மிகவும் முக்கியம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேர சாப்பாட்டோடும் 2 glass தண்ணீரும், படுக்கப் போகும் பொழுது 1 glass தண்ணீரும் குடிப்பது நல்லது என்று கூறப்படுகின்றது. அதாவது ஒரு நாளைக்கு குறைந்தது 9-10 glass தண்ணீர் குடிக்க வேண்டும். இப்படிக் குடிப்பதால் நாங்கள் எங்களுடைய சிறுநீரை dilute ஆக வைத்திருக்க முடிகின்றது. சிறுநீரகக் கற்கள் படிவதற்கு சிறுநீர் கல்சியம் போன்றவைகளால் Concentrae ஆக இருந்தால் தான் கூடிய வாய்ப்புகள் உண்டாகின்றது. ஆகவே keep the urine diluted by drinking more water.
அடுத்ததாக oxalate உள்ள உணவு வகைகளான Tea, Cocoa, Chocolates, கீரை வகைள், Spinach, Parsley, முருங்கைக்காய், Peanuts, Almonds போன்ற சகல விதமான Nuts முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

சிறுநீரகக் கற்களால் கஷ்டப்படுபவர்கள் Uric acid ஐ குறைப்பதற்காக மாமிசங்களை உணவில் குறைக்க வேண்டும். Gouty Arthristis இற்கு மருந்தைப் பாவித்து குணமடையுங்கள். Triple phospahte stones, bacterial infection ஆல் வருகின்றது என்பதை அறிந்தோம். தகுந்த Antibiotics ஐ பாவித்து Urinary tract infection ஐ ஒழித்து விடலாம். அடிக்கடி Urinary tract infection வந்தால், அதற்கு என்ன மூல காரணம் என்று அறிந்து, அதற்கேற்ற சிகிச்சை பெறுவது முக்கியம். இதற்கு உங்களுடைய குடும்ப வைத்தியர் மூலமாக Urologist என்று அழைக்கப்படும் இந்த வருத்தங்கள் சம்பந்தமான வைத்திய நிபுணரை சந்தித்து தகுந்த ஆலோசனையும் சிகிச்சையையும் பெறலாம்.

சிறுநீரகக் கற்களைப் பொறுத்த வரையில் இந்த மாதிரியான கற்கள் திரும்பவும் வராமல் தடுப்பதே மிக முக்கியம். ஆகவே மேற்கூறிய ஆலோசனைப் படியும், அதிக நீரை அருந்தியும், ஆரோக்கியமாக வாழ வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# Life of Pi - இது ஒரு திரைப்படம் அல்ல

கடந்த சில மாதங்களாக உலகளாவிய ரீதியில் பல திரையரங்குகளில் Life of Pi – லைவ் ஒவ் பை - பையின் வாழ்க்கை) என்ற திரைப்படம் காண்பிக்கப்படுகிறது. இதனை ஒரு முறையல்ல, இரண்டு முறைகள், மூன்று முறைகள் கூடப் பார்த்தவர்கள் பலர் உண்டு. Life of Pi என்ற நாவலின் நூலாசிரியர் Yaa Martel என்பவர் 2001ல் மன்புக்கர் பரிசை இந் நாவலுக்காக பெற்றார். நான் 2002ல் இதனை வாசித்த பொழுது இது ஒரு திரைப்படமாக வரும் என்ற சாத்தியக் கூறுகள் எனது மனதில் தோன்றவில்லை. ஏனெனில் 227 நாட்கள் பசுபிக் சமுத்திரத்தில் ஒரு 16 வயது இளைஞனுக்கும் வங்கப் புலிக்கும் இடையே நடக்கும் வாழ வேண்டும் என்ற போராட்டமே (Survival) இக் கதையாகும்.

கடலில் மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையே ஏற்பட்ட தொடர்பு - ஒருவர் வாழ்ந்தால்தான் மற்றவர் வாழ முடியும் என்ற நிலைமை - இதனையே திரும்பத் திரும்ப வாசிக்கிறோம். இதனை படமாக்குவது அவ்வளவு சுலபமல்ல. ஆனால் நாவலில் காணப்படும் உணர்வுகளையும், கேள்விகளையும் கொஞ்சம்கூட குறைவின்றி பட இயக்குநர் Ang Lee காட்டியுள்ளார். அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது மகளுடன் சேர்ந்து இந் நாவலை வாசித்த பின்பு Yaan Martelக்கு தனது கைப்பட ஒரு பாராட்டுக் கடிதம் எழுதியுள்ளார். நாவலில் வரும் மிருகங்களும், இறைவனின் மகாசக்தியுமே தங்களைக் கவர்ந்ததாகக் கூறியுள்ளார்.

இதுதான் இந் நாவலின் கதை - பாண்டிச்சேரியில் Piscine Molitor Patel (Pi) தனது மூத்த சகோதரனுடனும், பெற்றோருடனும் வசித்து வருகிறான். இவனது தந்தை சொந்தமாக ஒரு மிருகக் காட்சிச்சாலை வைத்திருக்கிறார். பாண்டிச்சேரியில் இனிமேலும் மிருகக் காட்சிச்சாலை நடத்த முடியாதென்ற நிலை ஏற்படுகிறது. எல்லா மிருகங்களோடும் இக் குடும்பம் அமெரிக்கா நோக்கி கப்பலில் புறப்படுகிறார்கள். கலிபோர்னியாவில் மிருகங்களை விற்று பெறும் பணத்தொகையை கொண்டு அடுத்த கட்டத்துக்கு நகர்வதே இவர்கள் திட்டம். பசுபிக் சமுத்திரத்தில் மணிலாவுக்கு அண்மையில் கப்பல் செல்லும்போது பாரிய புயலில் சிக்குகிறது. உயிர் காக்கும் படகொன்றில் Pi தஞ்சம் அடைகிறான். அதே கப்பலில் வரிக்குதிரை, குரங்கு, கழுதைப்புலி, Richard Parker என்ற வங்கப்புலியும் அடைக்கலம் புகுந்துள்ளனர். கோர சமுத்திரத்தின் மத்தியில் ஒவ்வொரு மிருகமாக வங்கப் புலியின் பசிக்கு இரையாகின்றன. எஞ்சி நிற்பது Piயும் Richard Parkerஉம் மாத்திரமே. இவர்கள் இருவரும் 227 நாட்கள் சமுத்திரத்தில் நடத்தும் வாழ்க்கைப் போராட்டம்தான் இத்திரைப்படம்.

பம்பாய் ஜெயசிறீயின் குரலில் - கண்ணே கண்மணியே கண்ணுறங்காய் பூவே... என்ற பாடலுடன் படம் ஆரம்பமாகிறது. ஒரு ஆங்கிலப்படம் (சில வசனங்கள் தமிழிலும் உள்ளன) தமிழ் பாடலுடன் ஆரம்பிக்கப்படுவதே எம்மை கதிரையில் நிமிர்ந்து உட்கார வைக்கிறது. பாடலின் பின்னணியாக வகை வகையான மிருகங்கள் காட்டப்படுகின்றன. இதுவே கண்கொள்ளாக் காட்சியாக அமைந்துள்ளது. இம்முறை இப்பாடல் Oscar விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒஸ்கார் விருதின் சரித்திரத்திலேயே முதல் முறையாக ஒரு தமிழ்ப்பாடல் இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டுள்ள பெருமை இப்பாடலைச் சாரும்.

வங்கப் புலி சம்பந்தமான பல காட்சிகள் அனிமேஷன் தொழில்நுட்பம் மூலம் மிகவும் நேர்த்தியாக காட்டப்பட்டுள்ளன. Graphics எது, உண்மை எது என்பது தெரியாதவாறு இருக்கிறது. அத்துடன் முப்பரிமாண காட்சிகள் (3D) மேலும் மெருகூட்டுகின்றன. Richard Parker இன் ஒவ்வொரு அசைவும் மெய்சிலிர்க்க வைக்கிறது. சிறுவயதில் ஒருமுறை Pi புலிக் கூட்டிற்குள் தனது கையை விடுகிறான். புலி தன்னோடு நட்பாக இருப்பதாக நினைக்கிறான். தக்க தருணத்தில் அவன் தந்தை வந்து அவனது கையை இழுத்து விடுகிறார். என்னதான் நல்லதுபோல் தோன்றினாலும் மிருகம், மிருகம்தான் என்பதனை மகனுக்கு அறிவுறுத்த விரும்புகிறார். ஒரு ஆட்டைக் கொண்டு வந்து புலிக் கூட்டிற்குள் விட்டு அதனை எப்படிப் புலி குதறி கொன்று உண்கிறது என்பதனைப் பார்க்கச் செய்கிறார். அதனால் சிறுவயதில் இருந்தே Piக்கு புலி என்றால் பெரிய பயம். அத்தகைய ஒரு புலியுடன் 227 நாட்கள் சமுத்திரத்தில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஒரு கட்டத்தில் ஒருவரை ஒருவர் கொல்லக்கூட நினைக்கிறார்கள்.

ஆனால் ஒருவர் வாழ வேண்டுமானால் மற்றவரும் வாழ்ந்தே ஆக வேண்டும் என்ற பெரிய தத்துவத்தை உணருகிறான். இதனைத்தான் symbiotic relationship என்று சொல்வோம் (இணை வாழ்வுத் திறன்) இதனை கணவன் மனைவி உறவுகளில்கூடக் காண்கிறோம். ஒருவரில் ஒருவர் சில காரணங்களுக்காகத் தங்கியிருக்கிறார்கள். கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டால்கூட இணைந்து வாழுந்திறன் காரணமாக வாழ்க்கைப் படகை செலுத்திக் கொண்டு செல்கிறோம். அன்புக்கும் நட்புக்கும் கொடிய மிருகம்கூட கட்டுப்படும் என்ற (vibration) மகத்தான உண்மையை இவர்களின் கூட்டுவாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது.

இரவில் ஒளி தரும் தாவரங்கள் நிறைந்த தீவு பிரமிப்பு அடைய வைக்கிறது. கப்பல் இத்தீவில் கரை தட்டியவுடன், மக்கள் இல்லாத இத்தீவில் கதை முடிந்துவிடுமோ என்ற நினைவு ஏற்படுகிறது. அப்படி நடக்கக்கூடாது என்ற நப்பாசையும் ஏற்படுகிறது. அவ்வளவு தூரத்துக்கு Piயும், Richard Parker உம் நல்லாக வாழ வேண்டும் என்ற ஆசையை மனதில் வளர்த்துக் கொள்கிறோம். ஈற்றில் மெக்சிகோ நாட்டில் வந்து கப்பல் கரை ஒதுங்குகிறது. கடலில் இருக்குமட்டும் கரையை காணவேண்டும் என்ற உந்தலால் மனச் சோர்வையும் உடற்சோர்வையும் ஒதுக்கி வைத்துவிட்டுப் போராடும் Pi "இனிமேல் என்னால் முடியாது" என்பதுபோல் மணலில் விழுந்து விடுகிறான். Richard Parker கரையில் இறங்கி - இனிமேல் தனக்கும் Piக்கும் ஒருவிதமான தொடர்பும் இல்லை என்பதுபோல் அவனைத் திரும்பிக்கூடப் (மறுபக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா? 29

"நல்லது அல்லது என்று சொல்வதெல்லாம் சிந்தனையாலேயே உருவாக்கப்படுகிறது" என்று ஷேக்ஸ்பியர் தனது 'ஹாம்லெட்' நாடகத்தில் குறிப்பிடுகிறார். சிந்தனை எல்லாவற்றிற்கும் மனம் சார்ந்த காரணமே அடிப்படையாகும். பொதுவாக மூன்று வகையான மனங்களினால் நாம் சிந்தித்து வாழ்வினை இயக்குகிறோம்.

முதலாவது விழிப்பு நிலையில் உள்ள எமது வெளிமனம். புதிய செய்திகளை உள்வாங்கிக் கொள்ளவும், அதைத் தற்போதைய அறிவுடன் ஒப்பிடவும், அதனுடைய மதிப்பு அல்லது எமக்குப் பொருத்தமானது என்ற விதத்தில் அதனைப் பகுப்பாய்வு செய்யவும், அதனை நடைமுறைப்படுத்தலாமா வேண்டாமா என்ற முடிவையும் இது எடுக்கிறது. பொதுவான வாழ்க்கைப் போக்கினை இது தீர்மானிக்கிறது.

எமது இரண்டாவது மனம் ஆழ்மனம் ஆகும். இது எமது வாழ்வு முழுவதற்கும் உரிய ஒவ்வொரு சிந்தனையையும், கருத்தையும் உணர்ச்சியையும் பதிவு செய்யும் தகவல் வங்கியாக உள்ளது. அது எம்முடைய எல்லாவித வார்த்தைகளையும், செயல்களையும், எம்முடைய தனிப்பட்ட கருதுகோளுடன் பொருந்திய தற்போதைய மனப்போக்குகள், நம்பிக்கைகள், பயங்கள், பெருமிதங்கள் போன்ற எல்லாவற்றையும் சேகரித்து வைத்துக் கொள்கிறது. அத்துடன் எமது உடல் சார்ந்த எல்லாவிதமான செயல்களுக்கும் ஆழ்மனமே பொறுப்பாகிறது.

எமது நரம்பு மண்டல அமைப்பையும், எமது இதயத் துடிப்பின் அளவையும், மூச்சையும், உணவுச் செமிபாட்டையும், நினைவாற்றலையும் அதுவே வைத்திருக்கிறது. மிகப் பெரிய கணினி போன்றது அது. பத்துக் கோடிக்கு மேற்பட்ட கட்டளைகளை செயல்படுத்துவதுடன் எமது உடலிலுள்ள இலட்சக் கணக்கான உயிரணுக்களில் உள்ள நூற்றுக் கணக்கான இரசாயனப் பொருட்களையும் துல்லியமாக சமப்படுத்தி விடுகிறது.

மூன்றாவதான உயர் மனம் என்பது எல்லையில்லாத அறிவாற்றலுடன் தொடர்புடையது. எந்த ஒரு இலக்கையும் அடைவதற்கு உதவுவது இதுவாகும். கருத்துக்களையும், விடைகளையும் எமக்கு அளிக்கும் மனம் இதுதான். உள்மன எழுச்சிக்கும், கற்பனைக்கும், முன்கூட்டி அறியும் திறனுக்கும், உள்ளுணர்வுக்கும் அடிப்படையாக உள்ளது. நாம் தயார் நிலையில் இருக்கும்போது எமது பிரச்சனைக்கு அல்லது கேள்விக்கு சரியான தீர்ப்பினை வழங்குகிறது. தீர்க்கமான மனநிலையில் நாம் உள்ளபோது தெளிவான இலக்குகளையும், விரிவான மனக் காட்சிகளையும், நேர்மறைக் கட்டளைகளையும் வழங்குகிறது. நாம் கற்பனை செய்வதனை விடவும் வேகமாக எமது இலக்குகளை அடைய இம்மூன்று மனங்களும் உதவுகின்றன.

சராசரியான ஒருவரைவிட இம்மூன்று மனங்களின் செயற்பாடுகள் எம்மை சிறந்த மனிதராகவோ, மேதைகளாகவோ உருவாக்கிவிடும். எதுவித அடிப்படையும் இல்லாதவர்கள் தொழிலில் வெற்றி காண்பதற்கும், பெரிய படிப்பு படிக்காதவர்கள் எல்லாம் மேதைகளாவதற்கும் இம்மூன்று மனங்களின் கூட்டான சேர்வே உதவுகிறது. ஒரே சமயத்தில் இயங்கும் இம் மனங்கள்போல் உயர்ந்த திறன் வேறொன்றிற்குமில்லை.●

## Life of Pi ...

பார்க்காது காட்டுக்குள் செல்கிறது. மிருகங்களுக்கு உரிய மனிதனைத் தின்றுவிடும் புத்திகூட எங்கே போய்விட்டது என எண்ணுகிறோம். அந்த அலட்சியமான நடத்தை படத்தின் ஆரம்பத்தில் "கண்ணே கண்மணியே" என்ற பாடல் எப்படி எம்மை கதிரையோடு கட்டிப் போட்டதோ அதேபோல் படம் முடிந்தபின்பும் இருக்கையை விட்டு எழும்ப முடியாதபடி செய்கிறது.

சிறுவயது முதலே Pi கடவுள்கள் பற்றிய கேள்விகளோடும், தேடல்களோடும் வாழ்ந்தவன். ஓடி, ஓடி ஒவ்வொரு சமயத் தலங்களுக்கும் சென்று பார்க்கிறான். அந்தத் தேடலுக்கான விடை இந்தப் பயணத்தில் கிடைக்கிறது. எல்லாக் கடவுளும் ஒன்றுதான், எல்லா சமயப் போதனைகளும் ஒன்றுதான் என்பதை வாழ வேண்டும் என்ற வேட்கை எமக்கு உணர்த்துகிறது. மண்ணை உண்ட கண்ணன் வாயினுள் பிரபஞ்சத்தையே காண்கிறாள் யசோதை. ஆனால் அந்தப் பிரபஞ்சத்தில் பரவிக் கிடக்கும் எல்லாமே இறைவன்தான் என்ற உணர்ச்சியை இத்திரைப்படத்தில் காண்கிறோம். ஒரு ஆங்கிலப்படம் (இப் படத்திற்கு மொழியே தேவையில்லை) இரண்டு மணித்தியாலத்திற்கு மேல் எம்மை இருக்கையோடு கட்டிப் போடுமானால் அதன் வெற்றிக்கு வேறு அளவீடே தேவையில்லை. மொத்தத்தில் Life of Pi ஒரு திரைப்படமல்ல. ஒரு தவம்.●

## வங்கி அட்டை மோசடியில் ஏழு கனடிய இலங்கையர் மலேஷியாவில் கைது

மலேஷியாவில் பாரிய வங்கி அட்டை மோசடியொன்றை அந்நாட்டு காவற்றுறையினர் முறியடித்துள்ளனர். பல நாடுகளின் வங்கி அட்டைகளுடனும் பெருந்தொகையான வெளிநாட்டுப் பணத்துடனும் இருபதுக்கும் அதிகமானவர்கள் கைதாகியுள்ளனர். இவர்களில் ஏழு பேர் கனடியப் பிரஜாவுரிமை பெற்ற இலங்கையர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வங்கி அட்டை மோசடிகளில் ஈடுபடுவதற்காகவே மலேஷியா சென்றிருந்ததாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கைதானவர்களில் பதினொரு பேர் இலங்கையிலிருந்து மலேஷியாவுக்குச் சென்றிருந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# புது வருடம்

'2013 புதுவருடம் பிறக்கிறது, என்ன செய்யலாம்?' என்றார் நண்பர். 'அது நல்ல காரியம். அதை தடுக்கக்கூடாது' என்றேன் நான். 'கொண்டாடப் போவதில்லையா?' என்றார். 'வேறு என்ன, இரவு விருந்துதான்' என்றேன். அப்படித்தான் தீர்மானமானது. விருந்துக்கு எட்டுப் பேர் வருவதாக சம்மதம் தெரிவித்தார்கள். 200 பேர் ஒரே சமயத்தில் இருந்து உண்ணக்கூடிய பிரம்மாண்டமான பொஸ்டன் உணவகம். அங்கே இடம் கிடைப்பது அரிது. ஆகவே முன் கூட்டியே ஒரு மேசையை பதிந்து விருந்தை உறுதி செய்துகொண்டோம்.

நண்பர்கள் ஒவ்வொருவராக குறித்த நேரத்துக்கு வந்தனர். எங்களுக்கு பரிமாறிய பெண் இளம் வயதுக்காரி. நூலகத்து பழைய புத்தகம்போல மஞ்சள் முகம். பனிச்சறுக்குகாரிபோல எங்களுக்கு மேசையை காட்டிவிட்டு ஓடியபடியே இருந்தார். முதலில் வைன் ஓடர் பண்ணினோம். பின்னர் மேசையிலேயே நெருப்பு மூட்டி நெடுகலும் சூடாகவே இருக்கும் சூப்பை குடித்தோம். இப்பொழுது பிரதான உணவு. ஒவ்வொருவரும் அவரவருக்கு வேண்டிய உணவுக்கு ஆணை கொடுத்தோம். உணவகம் நிரம்பியிருந்தது. பிளேட் சத்தம், கரண்டி சத்தம், மனிதச் சத்தம் எல்லாம் சேர்ந்தாலும் கூட்டுச்சத்தம் 'ஓ' என்றுதான் எழுந்தது. பரிசாரகர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். சிலர் கைகளில் மூன்று, நான்கு பிளேட்டுகளை லாவகமாக காவி னார்கள். வேறு சிலர் வண்டில்களில் வைத்து தள்ளினார்கள். எங்கள் பரிசாரகி வண்டிலில் உணவை தள்ளிவந்து எல்லோருக்கும் பரிமாறினார். பசி இல்லாதவர்- களுக்கும் பசியை கிளப்பும் நல்ல மணம். சாப்பிடத் தொடங்கினோம்.

நான் ஒரு கரண்டியை வாயினுள் வைத்தேன். என்ன ருசி. என் வாழ்நாளில் அப்படியான ஒன்றை சுவைத்ததில்லை. இன்னொரு வாய் கரண்டியை அள்ளி உண்டேன். மூன்றாவது கரண்டி உணவை வாய்க்கு கிட்ட பிடித்தபடி. மேசையை பார்த்தேன். என்னுடைய பிளேட்டை காணவில்லை. மேசைதான் இருந்தது. திரும்பிப் பார்த்தேன் மஞ்சள் முக பரிசாரகி என் பிளேட்டை எனக்குத் தெரியாமல் பின்னுக்கு இருந்து தூக்கிவிட்டது தெரிந்தது. ஒரு மன்னிப்பு இல்லை. விளக்கம் இல்லை. நான் பார்த்தபோது தூரத்தில் புள்ளியாக ஓடிக்கொண்டிருந்தார். அவர் காவிக் கொண்டுபோன அதே பிளேட்டை இன்னொருவருக்கு பரிமாறிவிட்டு சமையல்கூடத்துக்குள் நுழைந்தார்.

உடனே என் மேசையிலிருந்த மீதி ஏழுபேரும் அறிவுரை வழங்க ஆரம்பித்தார்கள்.

'நீங்கள் பிளேட்டை எடுக்க விட்டிருக்கக்கூடாது.'
'பிளேட்டிலேயே கண்ணாயிருப்பது முக்கியம்.'
'முறைப்பாடு செய்வதுதான் சரி.'
'அவர் மார்பிலே குத்தியிருக்கும் பெயரை நினைவில் வையுங்கள்.'

மூன்றாவது கரண்டி உணவு இன்னும் என் கையிலேயே இருந்தது. அதை வாய்க்குள் வைத்தபடி யோசித்தேன். 'இத்தனை அறிவு எனக்கு இருந்தால் நான் கார் பின் கண்ணாடி துடைப்பானை எப்படி இயக்குவது என்பதை ஒருவருடம் முன்பாகவே கண்டுபிடித்திருப்பேன்.'

மற்றவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஐந்து நிமிடம் கழிந்து பரிசாரகி ஆவி பறக்கும் உணவை ஒரு பிளேட்டில் கொண்டுவந்து என் முன் வைத்தார். நான் திரும்பிப் பார்க்குமுன்னர் மறைந்துவிட்டார். அப்பொழுது கூட ஒரு விளக்கம் இல்லை. ஆனால் என்னால் ஊகிக்கக்கூடியதாக இருந்தது. இதுதான் நான் ஆணை கொடுத்த உணவு. வேறு யாரோ ஓடர் பண்ணிய உணவை எனக்கு தவறுதலாக தந்துவிட்டார். என்னுடைய உணவும் சுவையாகத்தான் இருந்தது. ஆனால் என்னுடைய எச்சிலை உண்ணும் மனிதரின் பிளேட்டில் இருக்கும் உணவின் சுவைக்கு கிட்டவும் நிற்கமுடியாது.

அதற்கு பின்னர் அந்தப் பெண் பலதடவை எங்கள் மேசைக்கு வந்து பரிமாறினார். ஒவ்வொரு முறையும் அவர் அணுகும்போது என் பிளேட்டை இரண்டு கைகளாலும் இறுக்கிப் பிடித்துக்கொள்வேன். அப்பொழுதும் அந்தப் பெண் பேசவில்லை. இறுதியில் பில் கொண்டு வந்தார். அதையும் கட்டிவிட்டு எங்கள் எங்கள் மேலங்கிகளை தேடி அணிந்துகொண்டு புறப்பட்டோம். பாதி வழியிலே இந்தப் பெண்ணை மறுபடியும் சந்தித்தோம். அவர் ஓட்டத்தை மறித்து அவர் எந்த நாட்டிலிருந்து வந்திருக்கிறார் என்று வினவினோம். 'இந்தோனேசியா' என்றார். 'எவ்வளவு காலமாக வேலை பார்க்கிறீர்கள்?' என்றேன். 'ஒரு வாரம்' என்றார். 'படிக்கிறீர்களா?' அவர் பொஸ்டன் பல்கலைக் கழகத்தில் கம்புயூட்டர் மென்பொருளில் முதுகலை படிப்பதாகச் சொன்னார். பகுதிநேரமாக இங்கே வேலை பார்க்கிறார். இந்த வருமானத்தில்தான் அவர் படிப்புக்கு பணம் கட்டுகிறார். கேள்விகள் முடிந்துவிட்டதால் நாங்கள் புறப்பட்டோம். அவர் எங்களைக் கலைத்துக்கொண்டு வந்து 'முறைப்பாடு கொடுக்கப்போகிறீர்களா?' என்றார். இல்லை என்று சொல்லிவிட்டு நகர்ந்தோம். அப்படியான ஒரு பிரபல உணவகத்தில் அன்று அந்தப் பெண் செய்த வேலையை மேலிடத்துக்கு சொன்னால் அவருடைய வேலை உடனே போவது நிச்சயம்.

வெளியிலே பனி கொட்டிக்கொண்டு இருந்தது. அவரவர் கார்களில் ஏறியபடி புதுவருட வாழ்த்தை உரக்கச் சொல்லிக்கொண்டு புறப்பட்டோம். ஒரு பழைய கவிதை நினைவுக்கு வந்தது.

சிறுவர்கள் விளையாட்டு முடிந்து. இரவு வந்தது.
ஒவ்வொருவரும் சந்திரனோடு
வீட்டுக்கு போனார்கள்.

அன்று நாங்கள் அவரவர்கள் வீடுகளுக்கு போய்ச் சேர்ந்தோம். எங்கள் ஒவ்வொருவரோடும் அந்த பெண்ணின் நினைப்பும் போயிருக்கும். வீட்டிலே புதுவருடம் ஏற்கனவே வந்து காத்துக்கொண்டிருந்தது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# புதிய பாப்பரசர்

பாரம்பரியம் மிக்க நடைமுறைகளுடன் மிகவும் ரகசியமான முறையில் ஒரு வழிபாட்டுமுறைத் தலைவரை தெரிவு செய்யும் வழிமுறை இம் மாதம் நடைபெறவுள்ளது.

வானத்தில் வெண்புகை பரவி விரவிடும் தருணத்தை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டனர் உலகம் முழுவதிலும் உள்ள ரோமன் கத்தோலிக்க விசுவாசிகள். வத்திகானில் உள்ளவர்கள் அதனை நேரடியாகவும் ஏனையோர் தொலை காட்டும் சாதனங்களாலும் பரவசத்துடன் பார்ப்பர்.

அந்த வெண்புகை புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற நல்ல செய்தியை முதன்முதலாக உலகிற்கு தெரிவிக்கும். பாப்பரசர் தெரிவாகவில்லை என்பதை தெரிவிப்பது அதற்கு முன்பாக ஒவ்வொருநாளும் காலையிலும் மாலையிலும் காற்றுடன் கலக்கும் கரும் புகையாகும். வாக்குச்சீட்டுகளை எரிக்கும் பொழுது சில இரசாயன சேர்வைகளைக் கலப்பதால் புகை இவ்வித நிறமாற்றம் பெறுகின்றது.

முதலாவது நூற்றாண்டின் முதலாவது பாப்பரசராக புனித பீட்டர் (பேதுரு) நியமனம் பெற்றதிலிருந்து 21ம் நூற்றாண்டின் முதலாவது பாப்பரசராக 16ம் பெனடிக்ட்(16வது ஆசிர்வாதப்பர்) தெரிவானதுவரை 265 பாப்பரசர்கள் திகழ்ந்துள்ளனர். எனவே இதுவரை 265 தடவைகள் அந்த வெண்புகை மகிமையுடன் வானில் கலந்திருக்கும். அப்பொழுதெல்லாம் தொடர்பாக ஒலிக்க வைக்கபட்டிருக்கும் தேவாலய மணிகளும் அவர்களுக்கு தேவ சங்கீர்த்தனமாக இருந்திருக்கும்.

ஞானஸ்நானம் பெற்ற சாதாரண ரோமன் கத்தோலிக்க பிரஜை கூட பாப்பரசராக வாய்ப்பிருப்பினும், 1378ன் பின் எவருமே அவ்விதம் தெரிவாகவில்லை.

பாப்பரசருக்கு அடுத்த நிலையில் உள்ள கர்தினால்கள்தான் (Cardinals) புதிய பாப்பரசரை தேர்ந்தெடுக்கும் உரிமம் உள்ளவர்கள். உலகெங்கும் 209 கர்தினால்கள் தற்பொழுது சேவை புரிகின்றனர். அவர்களுள் 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவதில்லை. அதனால் வாக்களிக்கும் தகுதியுள்ள 118 கர்தினால்கள் தற்பொழுது வத்திகான் நகருக்கு வந்து பாப்பரசரின் அதிகாரபூர்வ அரண்மனையான அபோஸ்தலிக்கில் உள்ள ஸிஸ்ரையின் (Sistine) தேவாலயத்தில் வாக்களிப்பில் ஈடுபட்டுள்ளனர். பாப்பரசரை தெரிவு செய்யும்வரை சகல கர்தினால்களும் தனிமைப்படுத்தப்படுவர்.

இவ்வாக்களிப்பு மிக மிக ரகசியமாக நடைபெறும். மூன்றில் இரண்டு அதிக வாக்குகள் பெற்றவர் புதிய பாப்பரசராவர். காலையில் இரண்டு மாலையில் இரண்டு என 30 சுற்றுகளின் நிறைவிலும் எவரும் பெரும்பான்மையைப் பெற முடியாமல் போனால் 50 வீத வாக்குகளை பெற்றுக் கொண்டவர் தெரிவாகலாம். எனினும் பாப்பரசர் தெரிவு சில வேளைகளில் நாட்கள் வாரங்கள் மாதங்களையும் தாண்டி மூன்று வருடங்களுக்கும் அதிகமாக நீடித்ததுமுண்டு. தெரிவு நிறைவு பெறும் வரை ஒவ்வொரு வாக்களிப்பின் பின்பும் சீட்டுகள் எண்ணப்பட்டு எரியூட்டப்படும். வெற்றி பெற்றவரின் வாக்களிப்பு விபரங்கள் அடுத்த நூறு வருடங்களுக்கு பேணப்படும்.

கர்தினால்களும் தேவாலய ஊழியர்களும் ரகசியம் காப்பதாக சத்தியப் பிரமாணம் மேற்கொண்டிருப்பர். வெளியுலக தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருக்கும். மிகவும் அவதானமாக இரகசிய கருவிகள் ஒலி வாங்கிகள் ஒளிப்பதிவு சாதனங்கள் போன்றவை பொருத்தப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்டறியும் நுண்ணிய சோதனையும் தீவிரமாயிருக்கும். இவ்வாறு கடும் ஏற்பாடுகளுடன் தேர்தல் காலம் முடியும்வரை அவர்கள் சகல தேவைகளையும் தனிமையிலேயே வரையறுத்துக் கொள்கின்றனர். மருத்துவர்கள் இருவர் அங்கிருப்பினும் அவசர மருத்துவ தேவைகளுக்கு மட்டுமே அவர்கள் வெளி உலகை பார்க்கலாம். தேர்தல் சமயத்தில் சில கர்தினால்கள் உள்ளே மரித்துமுளர்.

உலகம் முழுவதும் உள்ள 120 கோடி ரோமன் கத்தோலிக்க மக்களின் தலைவராக விளங்கும் 265வது பாப்பரசரான 16வது பெனடிக் சுகயீனம் காரணமாக 2013ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ம் திகதியுடன் பதவி விலகுவதாக அறிவித்ததைத் தொடர்ந்தே புதிய பாப்பரசர் தேர்வாக உள்ளார். 1415ம் ஆண்டு 12ம் கிரகோரி என்ற பாப்பரசர் பதவியை விட்டு விலகியிருந்தார்.

ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமையான மார்ச் மாதம் 31 ம் திகதி அல்லது அதற்குச் சில நாட்கள் முன்னதாக இத் தேர்வு இடம்பெறும் என்றும் கடந்த காலங்களை போலில்லாது விரைவான முடிவுகள் இம்முறை வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பாப்பரசர் தேர்வானதும் புதிய பெயரால் இனங்காணப்படுவார். 1978ம் ஆண்டு போலாந்து நாட்டைச் சார்ந்த Karol Wojtyla பாப்பரசராக தெரிவானதும் ஜோன் போல் 11 அல்லது 2வது அருளப்பர் சின்னப்பர் எனவும் 2005ம் ஆண்டு ஜேர்மனி தேசத்தைச் சேர்ந்த Joseph Alosis Ratzinger பாப்பரசராக தெரிவானதும் 16ம் பெனடிக்ட் (16வது ஆசிர்வாதப்பர்) எனவும் அழைக்கப்பட்டது அண்மைக்காலச் சான்றாகும்.

தற்போதைய பாப்பரசரான 16ம் பெனடிக்ட் பதவி விலகிய பின்னர் ஜோஸப் அலோய்சியஸ் ராட்ஸிங்கர் என்ற தனது பழைய பெயராலேயே அழைக்கப்படுவார். அத்துடன் புதிய பாப்பரசர் தெரிவாகும்வரை கார்தினால்களின் கூட்டங்களிலும் அவர் அங்கம் வகிக்கமாட்டார்.

பாப்பரசர் ( Pope) கர்தினால் (Cardinal) அதிமேற்றிராணியார் (Archbishop) மேற்றிராணியார் (Bishop) அருட்பணியாளர் ( Priest) என்ற வரிசையில் ரோமன் கத்தோலிக்க அருளாளர் அமைவார்கள்.

பிரபல சஞ்சிகையான போர்பஸ் (*Forbes*) புதிய பாப்பரசர்களாக வரக்கூடியவர்கள் என்று 19 கர்தினார்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது. அதில் 13வது இடத்தில் உள்ளவர் 65 வயதுடைய இலங்கைக் கர்தினாலான மல்கம் ரஞ்ஜித்.

பீட்டர் டர்கஸ் (கானா) மார்க் ஒப்லட் (கனடா) பிரான்ஸிஸ் ஓர்ன்ஸ் (நைஜீரியா) லூாவி அன்ரானியோ (பிலிப்பைன்ஸ்) லியனாடோ சேன்ட்ரீ (ஆர்ஜன்டீனா) ஆகியோரை அந்த இதழ் வெற்றி வாய்ப்புக்கு அண்மையில் உள்ளவர்களாகக் கருதுகின்றது.

அஞ்சலோ ஸ்கோலா (மிலான்) கிறிஸ்டோ ஸ்கொயன்போன் (வியன்னா) பெட்ரோ ஸ்கியரோ (சாவு போலோ) ஆகியோர் முன்னணியில் திகழ்வதாகவும் பாப்பரசரின் கலாசார பேரவைத் தலைவர் கயன் பிரன்கோவன்ஸியும் புதிய பாப்பரசர் ஆகலாம் என எதிர்வு கூறுகின்றது.

புதிதாக தெரிவு பெற்ற பாப்பரசர் வத்திகானில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் திருப்பலி கொடுப்பார். பின்னர் ஆசீர்வதிப்பார்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# நீராடும் நிலமடந்தை

1

*வணக்கம்!*

*மற்றுமொரு தொடரினூடாக இணைவதில் மகிழ்ச்சி. கடந்த நாட்களில் தமிழர் தகவல் சஞ்சிகை வாயிலாக, இரு தொடர்களை எழுதியுள்ளேன். அந்த எழுத்துகளை விமர்சித்தவர்களுக்கு நன்றி.*

*தொல்காப்பியர் காலந்தொட்டு, ஐவகை நிலங்களை மட்டுமே அறிந்திருந்த தமிழர், கடந்த முப்பது ஆண்டுகளுக்குள் ஆறாம் நிலமொன்றையும் உருவாக்கியுள்ளனர். தாயகம் விட்டகன்று, தொல்காப்பியம் குறிப்பிட்ட நிலமரபுகள் பெரிதும் இல்லாதிருந்த புதிய நிலப்பரப்பில் குடியேறி, தமக்கான நிரந்தர இருப்பை உருவாக்கிக்கொண்டனர்.*

*குருதியும் வியர்வையும் கலந்து சிந்தி உருவாக்கிய இருப்பு இது. இலக்கியம் உணர்த்தும் நில மரபுகளான கருப்பொருள், முதற்பொருள், உரிப்பொருள் என்பன முற்றிலும் மாறுபட்டு விளங்கிய தளங்களில், வேர் அறுந்த நாற்றுகளாய் விழுந்து, உயிர் ஊன்றி எழுந்த வாழ்வு இது. வலிகள் நிறைந்து வழிய வழிய, நிகழ்த்தப்பட்ட இருப்புகளுக்கான முயற்சிகளின் சாட்சியங்களாகத் திகழ்பவை, சொடுங்கிய விரல்களுக்குள் பேனாவை இறுக்கி, சில படைப்பாளிகள் இறக்கி வைத்த படைப்புகள்தான். இவையே ஆறாம் நிலப் பிறப்பின் ஆதாரங்கள். இவை பல்வகை இலக்கிய வடிவங்களைக் கொண்டுள்ளன. சஞ்சிகைகளிலும், தொகுப்புகளிலும், தனிநூலாகவும் வெளிவந்துள்ளன. உள்ளடக்கத்திலும், உணர்வு வெளிப்பாட்டிலும், படைப்பின் வடிவமைப்பிலும் இப்படைப்புகள் புதிய பரிமாணங்களை உருவாக்கியிருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தமிழ் இலக்கியம் இதுவரை தொட்டிராத பாடுபொருள் மரபினை இவை தோற்றுவித்திருப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.*

*இப்படைப்புகளை மீள்பார்வை செய்வதே என் புதிய தொடரின் உள்ளடக்கமாகும். இந்தப் புதிய தொடர் முற்றிலும் வித்தியாசமானது என்று சொல்வதற்குரியதல்ல. சில விமர்சகர்கள் ஏற்கனவே செய்துவிட்ட, செய்து-கொண்டிருக்கின்ற பணிதான். இருப்பினும் எனது பார்வைக் கோணத்தினூடாக இந்த விமர்சகப் பணியில் ஈடுபட என் உணர்வுகள் விரும்பின. திறனாய்வுத் திறனும், காய்தல் உவத்தல் அற்ற நெஞ்சக நிலையும் இப்பணிக்கு அவசியம் என்பதை நான் அறிவேன்.*

*என் கல்வி இந்நிலைக்கு உதவும் என்ற தற்துணிவில் இப்பணியில் ஈடுபடுகின்றேன். உங்கள் விமர்சனங்களுக்காக என் வாசல் எப்போதும் திறந்திருக்கும்.*

## விதிக்கெதிரான இருத்தல்

எமது வாழ்புல இருத்தல் என்பது 'வாழை ஈனும் குலைபோல' இயல்பாய் நிகழவில்லை என்பதை வாழ்புலப் படைப்பாளர்கள் ஆழமாகப் பதிவு செய்துள்ளனர்.

சுகன் எனும் பிரான்ஸ் நாட்டைத் தளமாகக் கொண்ட கவிஞர் எழுதிய ஒரு கவிதை 'இருத்தலிற்காய்' எனும் தலைப்புக் கொண்டது. தாயக வாழ்விருப்பு இழந்து, உயிர் இருப்பு நாடி, புது இருப்பிடம் தேடியோடிய வலிகளின் மொழி இக்கவிதை. அம்மணமாகவேனும் குந்தியிருக்க ஒரு குடிநிலம் தேடிய தமிழ் அபலைகள் எவற்றையெல்லாம் அறிந்திருந்தார்கள் என எள்ளிச் சோகம் கொள்கின்றது இக்கவிதை.

"இரவோடு இரவாக
இன்னொரு எல்லைக்குள்
போவதறிவார்கள் போகும்
வகையறிவார்கள்
அத்திலாந்திக் பசுபிக் கரீபியன் கடல்
கட்டுச்சோறுமின்றி காற்றின் துணையுமின்றி
கடப்பதறிவார்கள் கடலுள்
அமிழ்ந்தது மறிவார்கள்

இந்தப் பனிமலையின் இடுக்களூடு
இடுப்பிலிரண்டு குழந்தைகள் ஏந்தி
இவ்விருளும் பொழுதைக் கடந்து விட்டாலோ
இத்தாலி வந்துவிடும் என்ற மொழி கேட்டு
எட்டி வைத்த கால்கள் தளர
இறந்த குழந்தைகளின் கதையறிவார்கள்.."

இருபது ஆண்டுகளுக்கு முன்பாக ஐரோப்பிய நாடுகளில் குடியேறியவர்களின் துயர வரலாற்றின் ஆழப்பதிவு இது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை கால்நடையாகக் கடந்தும், நீர்தாங்கி பாரஊர்திகளுக்குள் ஒளிந்தும், இழந்த உறவுகளும், உறுப்புகளும் போக எஞ்சியவற்றோடு மிஞ்சியவர் கூறிய கதைகள் இவை.

தமிழர்கள் எல்லாம் அறிந்தவர்கள் ஆதலால், இதையும் அறிந்தவர்கள் என்கிறார் கவிஞர்.

எள்ளல் கவிதைகளில் பெரும்பாலும் நகைச்சுவை உணர்வே வெளிப்படும். ஆழச் சோகத்தைத் தன்னில் புதைத்து வெளிப்படுகின்றது சுகனின் இக்கவிதை.

கவிதை தொடர்கின்றது,

"தீவுகள் சமுத்திரம் பெருநிலப்பரப்புகள்
திக்கொன்றாகி இருக்கின்ற உறவுகள்
தேடியலைந்தும் துரத்தப்பட்டும்
பைத்தியம் பிடித்தும் பாதியில் திரும்பியும்
திரும்பத் திரும்ப வெளிக்கிடுகின்றார்
விதிக்கெதிரான
இருத்தலிற்காய்"
(புலம்பெயந்தோர் கவிதைகள் தொகுப்பு பக்கம் 122)

விதிக்கப்பட்ட இருப்பிலிருந்து விலகி, விதிக்கெதிரான இருத்தலுக்காக திரும்பத் திரும்ப வெளிக்கிடுகின்ற மனிதர்களாய் நாம். முன்னால் போனவர்களில் இறந்ததோர், உறுப்பிழந்தோர், மனநிலை பாதிக்கப்பட்டோர், திரும்பியோர் என பலதிற-த்தார் இருந்ததை அனைவரும் அறிவர்.

ஆயினும் இந்த வாழ்புலங்களை (புலம் பெயர்ந்து தமிழர் வாழும் நாடுகளை அனைத்தையும் குறிக்கும் சொல்லாக வாழ்புலம் என்ற சொல்லே இத் தொடரில் பயன்படுத்தப்படுகின்றது.) நோக்கிப் படையெடுத்தோர் குறைந்தபாடாக இல்லை.

ஆரம்பகால குடியேற்றத்தைக் கவிஞர் 'விதிக்கெதிரான இருத்தல்' என்கின்றார். இது சரியாகுமா? என்ற வினா எழலாம். ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து பழக்கப்பட்ட தாயகத் தளத்தில் இருந்து பிடுங்கப்பட்ட ஒரு நாற்று பனிப்புலத்தில் வேரூன்றாது.

விதிக்கெதிரான இருத்தலில் பெரும்பாலும் உயிரினங்கள் வெற்றி பெறுவதில்லை. இது பொது விதி. இதுவே கவிஞரின் கூற்றுக்கு ஏதுவாகின்றது.

மனிதனின் அறிவும் போராட்டக் குணமுமே விதிக்கெதிரான இருத்தலை எதிர்கொள்கின்றது. விதிக்கெதிராக இருத்தல் என்பது எங்கும் எப்போதும் சாத்தியப்படாது. விதிக்கிசைவாக வாழப்பழகுதலே என்றும் சாத்தியம். பின்னாளில் அது சாத்தியப்பட்டிருக்கின்றது.

ஆயினும் சுகனின் கவிதையில் இழையோடும் துயரப்பதிவுகள் ஆறாம் நிலத் தோற்றுவாய்த் துயரத்தின் படிமங்கள்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Toronto as 'sanctuary city' for migrants: A good thing?

*Some say access to city services "without fear" is good for all; others, including Immigration Minister Jason Kenney, that it sends the wrong message.*

Federal Immigration Minister Jason Kenney has criticized Toronto City Council's move to become a "sanctuary city" for undocumented migrants, saying it sends mixed signals and is counterproductive to Ottawa's effort in discouraging illegal migration.

"(Council's) motion tries to help illegal immigrants to stay in Canada, and we think that's the wrong message to send," Kenney said.

"If you're here illegally, please respect our laws and go back to your country." Council voted Thursday to consider how to make it easier for undocumented migrants to access municipal services, such as public health, shelters and food banks. It also reaffirmed its role as Canada's first "sanctuary city."

Below are some questions and answers explaining what it means and why the city is moving in this direction.

**Q:**What was actually approved?
**A:** Council asked staff to report, in consultation with the community, on ways to improve access to services for residents without legal status, develop training for front-line staff and managers, and establish a complaints protocol and a public education strategy. A report is due in the fall.

**Q:** Who are these undocumented residents?
**A:** There are an estimated 200,000 in Greater Toronto. Most work in cleaning and janitorial services, domestic work, construction, hospital and food services. Virtually all arrived here legally, but moved underground after their valid visas expired or refugee claims were denied.

**Q:** Then aren't undocumented residents here illegally?
**A:** True. They have no legal status in Canada and face removal or deportation for violating immigration laws. Migrant advocates use the terms "undocumented" or "non-status" to reframe the public debate over this precarious population.

**Q:** Why is the city willing to offer services to non-status residents?
**A:** According to Chris Brillinger, the city's executive director of social development, non-status residents pay property taxes through rent, HST through purchases of goods and services, and some forms of income tax.
Some councillors say that without an "access without fear" policy, non-status residents may be reluctant to come forward as witnesses or victims of crime for fear of deportation. Access for everyone to public-health programs may also enhance community health.

**Q:** What specific services can undocumented residents use without fear of being turned over to border-enforcement officials?
**A:**Public health programs, after-school recreation and care, breakfast and lunch programs for children and youth, emergency medical services, shelters and hostels, housing help, community centres, pools and arenas.

**Q:**What services will non-status residents not be entitled to?
**A:** Provincially and federally funded services and programs such as Ontario Works, government housing, OHIP, all income security programs.

**Q:**What do opponents say about such a policy?
**A:** Councillor Denzil Minnan-Wong, a strong opponent, believes it sends a message that it is OK to break the law to stay in Canada.

(Courtesy: Toronto Star, 2013 February 24)

## வில்லியமின் மனைவி கேட்டிற்கு ஹரியின் தோற்றத்தில் குழந்தை

இளவரசர் வில்லியம் மனைவிக்கு சிவப்பு நிற தலைமுடியுடன் குழந்தை பிறக்கும் என மரபியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கு 50 சதவீதத்துக்கும் மேல் வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். இங்கிலாந்து இளவரசர் வில்லியமின் மனைவி இளவரசி கேட் மிடில்டன் கர்ப்பமாக உள்ளார். அவருக்கு எந்த வடிவில், என்ன நிறத்தில் குழந்தை பிறக்கும் என்ற கருத்து தற்போது நிலவி வருகிறது.

இந்த நிலையில், கேட் மிடில்டனுக்கு பிறக்கும் குழந்தை அதாவது அரச பதவி ஏற்க இருக்கும் 3ஆவது தலைமுறை வாரிசு, சிவப்பு நிற தலைமுடியுடன் பிறக்கும் என மரபியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
தந்தை வில்லியம் போன்று கரடுமுரடான தலைமுடி மற்றும் குணாதிசயங்கள் போன்றோ, தாயார் கேட் மிடில்டன் போன்று நீண்ட முன் தலையுடன் இதய வடிவிலான முகம் போன்றோ அக்குழந்தை பிறக்காது என்றும் வில்லியமின் தம்பி ஹரியைப் போன்று சிவப்பு நிற தலைமுடியுடன் அக்குழந்தை பிறக்கும் என நிபுணர்கள் நம்புகின்றனர்.

அதற்கு 50 சதவீதத்துக்கும் மேல் வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இங்கிலாந்தில் சுமார் 5 ஆயிரம் பேரிடம் விஞ்ஞானிகள் மரபியல் சோதனை நடத்தினார்கள். அதில், அவர்களது முன்னோர்களின் டி.என்.ஏ. மூலக்கூறுகளில் 38.3 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் சிவப்பு நிறத்திலான முடியுடன் இருப்பது தெரிய வந்துள்ளது. எனவே, வில்லியம் - கேட் மிடில்டன் குழந்தைக்கும் சிவப்பு நிறத்தில் தலைமுடி இருக்கும் என தெரிவித்துள்ளனர்.

## உலகில் அதிக உயரமான பெண் மரணம்.

உலகில் அதிக உயரமான பெண்ணாக கருதப்பட்ட யாஓ டெபென் தனது 40 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார். சீனாவின் கிழக்கு பிராந்தியமான "செங் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் இவர் கடந்த 13 ஆம் திகதி உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட் - டுள்ளது. 1972ஆம் ஆண்டு பிறந்த யாஓ டெபேன், 7அடி 8 அங்குல உயரமுடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# தனிமையை விட தனிமையுணர்வு வாழ்வை நாசமாக்கிவிடும்

கூட்டுக் குடும்பமாக அம்மா அப்பா பாட்டன் பாட்டி என வாழ்ந்த காலங்கள் மலையேறிப் போய்விட்டன. இப்பொழுதோ பேசுவதற்கும் துயர்களைப் பகிர்வதற்கும், இன்பங்களைக் கூடிக் கொண்டாடுவதற்கும் முடியவில்லை. கோபிப்பதற்கும் திட்டுவதற்கும் கூட ஆளில்லாது துன்பப்படும் பலரை இப்பொழுது காணக் கூடியதாக உள்ளது.

நவீன வாழ்வில் வசதிகளுக்குக் குறைவில்லை. எல்லாமே வீட்டிற்குள் கிட்டும். ஆனால் பேசுவதற்கு ஆள்தான் கிட்டாது. கணவன் மனைவி ஓரிரு பிள்ளைகள். ஒவ்வொருவருக்கும் அவரவரது பாடுகள். கணினி அல்லது தொலைகாட்சிப் பெட்டி முன் உட்காருவதுதான் நாள் முழுவதும் வேலை. உலகையே உள்ளங்கையில் அடக்கும் தொலைபேசிகளும் இப்பொழுது வந்துவிட்டன.

உள் அறையில் உலகத்தைச் சுற்றி வரலாம். ஆனால் உள்ளுறையும் உள்ளத்தைத் தொடுவதற்கு யாருமே இல்லாமல் போய்விட்டது.

இதுதான் தனிமை.

ஆம்! தனிமை என்பது கொடுமையானது. அது ஓரிருவருக்கானது மாத்திரமல்ல, ஒரு உலகளாவிய பிரச்சனையாக உருவாகி வருகிறது.

தனிமையென்பது எப்பொழுதுமே ஒரே மாதிரியானது அல்ல. ஆளுக்கு ஆள் மாறுபடும்.

கணவன் இறந்துவிட குழந்தைகளும் வெளிநாடு சென்றுவிட நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடக்கும் தனிமை ஒருவிதமானது.
அதே நேரம் வகுப்பறை முழுவதும் சகமாணவர்கள் இருந்தாலும் அவர்களுடன் நட்புப் பெற முடியாத நிலையிலுள்ள பாடசாலை செல்லும் ஒரு பிள்ளையின் தனிமை முற்றிலும் வேறானது.

தனிமையும் தனிமையுணர்வும்

ஆம்! தனிமை வேறு. தனிமையுணர்வு வேறு.

தனிமை என்பது வெறுமனே உடல் ரீதியாகத் தனித்திருத்தல் எனலாம்.

மாறாக தனிமையுணர்வு என்பது ஒரு மனநிலையாகும். சுற்றிவரப் பலர் இருக்கலாம், சுவாரஸ்யமான பல விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவை எவற்றோடும் உளமார ஒன்றுபடாத நிலை இது. மற்றொரு விதத்தில் சொன்னால் வெறுமை உணர்வு, சூழலிலிருந்து அந்நியப்பட்ட மனநிலை, அல்லது தனிமைப்பட்டதான உணர்வு எனலாம்.

"I Feel lonely" என ஆங்கிலத்தில் சொல்வதை அடிக்கடி கேட்பதுண்டு. ஆனால் 'நான் தனிமையாக உணர்கிறேன்' என்று வெளிப்படையாகவோ அல்லது 'பேச்சுத் துணைக்குக் கூட யாரும் இல்லை' என மறைமுகமாகவோ சொல்வது எமது மரபில் மிகவும் குறைவு எனலாம். எமது உணர்வுகளுக்கு சொல்வடிவம் கொடுப்பதில் நாம் பின்தங்கி நிற்கிறோம்.

அண்மையில் இராணுவத்தில் இணைக்கபட்ட பல பெண்கள் விட்டு வந்ததாகவும் அல்லது நோயென ஆஸ்பத்திரில் படுத்ததாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம். இதற்கான காரணங்களை அரசியல் ரீதியாகவே பலரும் அணுகுகிறார்கள். ஆனால் முற்று முழுதாக மொழி கலாசார ரீதியாக அந்நியப்பட்ட சூழலில் ஏற்பட்ட தனிமையுணர்வும் காரணமாக இருந்திருக்கலாம்.

தனிமையுணர்வு ஏற்படக் காரணங்கள் என்ன?
பாரம்பரிய அம்சங்கள் முக்கிய காரணமாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. பல குடும்பங்களில் ஒருவரோடு ஒருவர் மனம் விட்டுக் கதைப்பதில்லை. மற்றவர்களிடம் இருந்து ஒதுங்கி வாழும் பழக்கம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள்.
சூழலில் ஏற்படும் மாற்றங்களும் நிறையவே காரணமாகின்றன. முற்றிலும் புதிய சூழலுக்கு இடம் மாறுதல் முக்கியமானது. சொந்த வீடு, சொந்த மக்கள், சொந்தப் பாசை, சொந்த உறவுகள் என வாழ்ந்தவர்கள் திடீரென புலம் பெயர்ந்து சென்று அந்நிய தேசத்தில் போடப்படும்போது தனிமையுணர்வு பலருக்கும் ஏற்படுகிறது. புதிய தொழிலில் இணையும்போதும் இந்த உணர்வு ஏற்படலாம்.

ஒரு சிலருக்கு சுற்றிவர நண்பர்கள், குடும்ப உறவினர் இருந்தும் தனிமையுணர்வு ஏற்படக் கூடும். அவர்களில் ஓரிருவராவது நம்பிக்கைக்கு உரியவர்களாக இல்லாதபோதே தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்பு அதிகமாகிறது.

மணமுறிவு, விவாகரத்து, துணைவரின் மரணம் போன்ற குடும்பப் பிரிவுகள் தனிமையை ஏற்படுத்தவே செய்யும். நெருங்கிய நண்பரின், உறவினரின் பிரிவு, மரணம் போன்றவையும் அவ்வாறே தனிமை உணர்விற்குக் காரணமாகலாம்.

ஒவ்வொருவருக்கும் தன்னைப் பற்றிய சுயமதிப்பு உயர்வாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் தனது உடலைப் பற்றி, அழகைப் பற்றி, தொழிலைப் பற்றி அல்லது வேறு ஏதாவது விடயம் பற்றிய தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களும் சற்று ஒதுங்கியிருக்க முயல்வார்கள். இதனால் தனிமை உணர்வும் ஏற்படலாம்.

வேறு உள நோய்களும் காரணமாவதுண்டு.

எத்தகைய பாதிப்புகள் எற்படலாம்.
தனிமையாக உணரும் ஒருவருக்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்பது தெரிந்ததே. நாம் உணராத அளவிற்கு பலவிதமான - வையாக அவை இருக்கலாம். இவை யாவும் நேரடியாக தனிமையுணர்வுடன் மட்டுமே தொடர்புடையன அல்ல என்றபோதும் ஏனைய காரணங்களுடன் சேர்ந்து இத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

மன அழுத்தம் அதிகரிக்கும். உணர்வுகளை மற்றவர்களுடன் பகிரப் பின்நிற்பதால் தனக்குள்தானே உழன்று இந்நிலை வரக் கூடும்.
எரிச்சல், மன அமைதியின்மை, மனவிரக்தி போன்றவை வரலாம். அவை தீவிரமடைந்து தற்கொலை பற்றிய எண்ணங்களுக்கும் அடிப்படையாகலாம். தூக்கக் குறைபாடு ஏற்படலாம். அதன் தொடர்ச்சியாக பகல் நேரச் சோம்பலும் ஏற்படுகிறது.
•மறதி அதிகரிக்கலாம். இதனால் கற்கைச் செயற்பாடுகள் பாதிப்புறலாம்.
சரியான தருணத்தில் சரியான தீர்மானங்களை (30ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# இரட்டைக் குறள்கள்

தமிழர் இனத்தையும் குணத்தையும் துல்லியமாக எடைபோட்ட இலக்கியவாதி திருவள்ளுவர்.

கயவரையும் காமுகரையும் கள்வரையும் ஏமாற்றுக்காரரையும் நம்பிக்கைத் துரோகிகளையும் திருக்குறள் எதிர்த்த அளவுக்கு வேறு எந்த நூலும் தமிழில் எதிர்க்கவில்லை.

குற்றங்களிலே பிராயச்சித்தம் இல்லாத குற்றம் என்று செய்நன்றி மறத்தலைச் சொன்ன இலக்கியம் திருக்குறள்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு
என்று எழுதிவிட்டுப் போனவர் திருவள்ளுவர்.

ஒரு தேவையைப் போய்ச் சொன்ன உடனேயே நல்லவர்கள் உதவுவார்கள். இந்தக் கெட்டவர்கள் அப்படியல்ல. அவர்களை தொழிற்சாலையிலே கரும்பு பிழிவது போலப் பிழிந்து கொன்றால்தான் சரிப்பட்டு வருவார்கள் என்று எந்தவித தயவும் காட்டாமல் எழுதியவரும் வள்ளுவர்தான்.

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்பு போல்
கொல்லப் பயன்படும் கீழ்!

திருவள்ளுவருக்குத் தெரியாத சமுதாயக் குறை நிறைகள் இல்லை. இன்றைக்கு சாமியார்களின் அலங்கோலத்தைப் பரவலாகப் பார்க்கின்றோம். இந்த லீலைகளை எல்லாம் வள்ளுவர் தெரிந்து வைத்திருக்கின்றார்.

மனத்திலே அழுக்கை வைத்துக் கொண்டு தாம் ஏதோ பெரிய துறவி போல தூய நீரிலே குளித்து மறைவாக பல இழிசெயல்களில் ஈடுபடும் பலரைத் தனக்குத் தெரியும் என்கிறார் வள்ளுவர்.

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்
என்று சாமியார் விடயத்தில் அலுத்துக் கொண்டவர் திருவள்ளுவர்.

மனிதனாக இருந்தாலும் சரி பிற உயிர்களாக இருந்தாலும் சரி எல்லாரும் நினைப்பது போல, பிறக்கும் போது சாதி முத்திரையோடு பிறப்பது கிடையாது. ஆனால் செய்கிற தொழிலை வைத்து சாதி ஏற்றத்தாழ்வு வந்து விடுகிறது. பிறப்பிலே இல்லாத சாதிக்கு தனியான அதிகாரம் வகுத்து குறள் எழுதி நேரத்தை வீணடிக்க விரும்பாமல் விட்டவர் வள்ளுவர்.

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வாது
செய்தொழில் வேற்றுமை யான்
சாதிக்கு பிறப்பு பிரச்சனை அல்ல. தொழில்தான் பிரச்சனையாக இருக்கிறது என்ற திருக்குறள் கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் யாராலும் அசைத்துப் பார்க்க முடியவில்லை.

அப்படிப்பட்ட திருவள்ளுவர் தமிழ்ச் சமுதாயத்திலே ஒரு பிரச்சனையைச் சந்தித்தார். படிப்பு வாசனையே இல்லாத சிலருக்கு படித்தவர்கள் மத்தியில் புகுந்து தாமும் பெரியவர்களாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்றிருந்த ஆசையே அது.

அப்படிப்பட்டவர்கள் கற்றவர்கள் முன்னிலையில் மேடையைப் பிடித்துக் கொண்டு எதையாவது சொல்லி முட்டாள்கள் என்று தங்களைத் தாங்களே காட்டிக் கொடுத்து கற்றவர்களால் இகழப்படுவது அன்றைய சமுதாயத்திலும் ஒரு வியாதியாகவே இருந்தது.

வள்ளுவர் அதற்கு ஒரு வழி சொன்னார். உனக்கு படித்தவன் மேடையிலே ஏற வேண்டும். புகழ் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அதற்கு நான் ஒரு நல்ல வழி சொல்கிறேன். அந்த மேடையிலே நீ வாயைத் திறக்காமல் இரு! எல்லாரும் அசந்து போவார்கள். அவர் நிறை குடம்! தளம்பவில்லை என்று உனக்குப் புகழ் கிடைக்கும் என்றார் அவர்.

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லாது இருக்கப் பெறின்.
தமது அறிவின் குறைபாட்டை உணர்ந்து கற்றவர்கள் முன்னிலையில் எதுவும் சொல்லாமல் இருந்தால் படிக்காதவனும் மிகவும் சிறந்தவன்தான் என்பது இந்தக் குறளின் பொருளாகும்.

இப்படிக் குறள் எழுதிய வள்ளுவர் படித்தவர்கள் மத்தியில் மௌனமாக இருந்து கொண்டு ஏமாற்றுபவர்களையும் கண்டுபிடிக்க ஒரு வழி சொன்னார். அப்படி ஒருவன் உன்னை ஏமாற்றினால் அவனைச் சும்மா விடாதே! பக்கத்திலே போயிருந்து கொண்டு எதையாவது கேள்.

சேக்ஷ்பியர் எழுத்திலே உங்களுக்குப் பிடித்தது எது என்று கேள். சேக்ஷ்பியரா, அவர் யாழ்ப்பாணத்து ஆளா? என்று திருப்பிக் கேட்டால் இவர் நம்ம ஆளுதான் என்று முடிவு பண்ணிக்கொள் என்றார் வள்ளுவர்.

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்

நூல்களைக் கல்லாத ஒருவன், 'நான் மிகுந்த அறிவு உடையவன்' என்று தன்னைத் தானே மதிக்கும் குணம் அவற்றைக் கற்றவன் வந்து உரையாடும் போது பிரச்சனையை ஏற்படுத்தும்.

கல்லாமை என்ற ஒரே அதிகாரத்தில் இந்த இரண்டு குறள்களையும் ஒன்றாக வைத்திருக்கிறார் திருவள்ளுவர்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# வலது கை கொடுப்பது அதற்கே தெரியக்கூடாது

உலகியலை ஓர் கண்ணோட்டம்விடின் ஒரு பொது உண்மை புலப்படும். அதுதான் கொடுப்பதும் வாங்குவதும்.

எம்மொழி பேசினும், எம்மதத்தினராயினும் எத்தேசத்தவராயினும் இதையே செய்கின்றனர். சூர்த்தஞானம் இதையே பிரகடனப்படுத்துகிறது. அதுதான் கொடுப்பதும் வாங்குவதும்.

"கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஆட்செய்மிண்" என்பது திருவிசைப்பா ஆசிரியர் கூற்று. மாதிரிக்குச் சில சொல்லலாம். நாளாந்த வாழ்க்கையில் பள்ளிக்கூடம் சென்றால் ஆசிரியர் அறிவைக் கொடுக்கிறார். மாணவர்கள் வேண்டுகிறார்கள். ஒரு வர்த்தக நிலையத்தில் நாம் பணம் கொடுத்துப் பொருள்களைக் கொள்வனவு செய்கிறோம். கலைஞர்கள் தாம் கற்ற கலைகளைக் கற்றுக்குட்டிகளுக்கு கொடுத்து சம்பளம் பெறுவர். ஆட்சியாளர் வரிகளை அறவிட்டு துஷ்டத்தனம் செய்வர். நாம் வரிகளை அரசாட்சிக்கு அளிக்கிறோம். உழைப்பாளி தொழில் செய்து முதலாளியிடம் சம்பளம் வேண்டுகிறார். தாய்மார் குறியெதிர்ப்பின்றித் தொண்டாற்றுவர். மரத்தை - தென்னை மரத்தை நட்டு நீரூற்றினால் - பருவம் வந்தால் இளநீர் தருகிறது.

அன்பளிப்புகளைப் பெற்றோர் இன்னோர் சந்தர்ப்பத்தில் திருப்பிக் கொடுக்கிறோம். ஆனால் தர்மம் செய்வது எதையும் எதிர்பார்த்தன்று. ஈகை, அறம், தர்மம், பதிலுபகாரம் கருதிச் செய்வதில்லை. மழை கைம்மாறு கருதாது பெய்கிறது. கைம்மாறு கருதாத கடப்பாடு முகில்களையே சாரும். இதை "என்னாற்றுங் கொல்லோநன்றி" என வர்ணிக்கும் மணிமொழிப் பிரான் இறைவர்க்கும் தனக்கும் உள்ள குடுக்கல் (கொடுத்தல்) வாங்கலில் இறைவனுக்கு யான் எப்படிக் கைம்மாறு செய்வேனென எண்ணுவதைப் பின்வரும் மணிமொழியிற் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

"அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை
ஆனந்த மாய்க் கசிந்துருக
என்பரம் அல்லா இன்னருள்தந்தாய்
யானிதற்கில னோர் கைம்மாறு"
கோயில் திருப்பதிகம் 2.

கைம்மாறு - பிரதியுபகாரம். வள்ளல்கள் பலர் அதற்கு இலக்கியமாய் வாழ்ந்து காட்டினர்.
வள்ளுவம் ஈகையென்றோர் அதிகாரம் வகுத்திருக்கிறது. "வறியார்க் கொன்று ஈவதே ஈகை" என்பார் தெய்வப்புலவர். அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவரன் பெற்றான் பொருள் வைப்புழி என்கிறது இன்னோர் குறள். உன் பணத்தைச் சேமித்து வைக்கும் வங்கி வயிறு என்பது இதன் பொருள். எய்ப்பு வரும்போது உதவுவது சேமநிதி. எனவே இந்தத் தானம், புண்ணியம் என்றும் பேசப்படும்.
கோதானம், பூதானம், கன்னிகாதானமென அறம் பதினெட்டாக வர்ணிக்கப்படுகிறது.

புண்ணியம், ஆம் புண்ணியம் செய்யப்பட வேண்டியது. பாவம் விடப்பட வேண்டியது. புண்ணியம் செய்வார்க்கும் பூவுண்டு நீருண்டு. வறுமையை நீக்குவது ஒரு கொடை. இரப்பது இழிவானது, அதனின் இழிவு இரப்பவனுக்குக் கொடுக்காமல் இருப்பது. கொடுப்பது உயர்ந்தது - அதனினும் உயர்வானது இரவாமல் வாழ்வது. ஆகவே கொடுத்துச் சாப்பிடு, பிறர் உண்ண நீ உண்.

அம்மா பிச்சை என எம் வீட்டு வாயிலிலே கேட்கும் அவலக்குரலை இனி இல்லாமற் செய்ய வேண்டும். புதிய உலகமொன்றைச் சிருட்டிப்பதானால் அது பசி இல்லாத உலகமாய் அமைய வேண்டும். எனவேதான் போரிடும் உலகை வேரொடு சாய்ப்போமெனக் கண்ணதாசன் பாடினார். இல்லாமையை இனி இல்லாமற் செய்ய வேண்டும். வெறும் கடதாசியிலோ - பாட்டிலோ அல்ல செயலிலே. எனவே நாம் சாதனையாளர் ஆவோம்.

மேலை நாட்டவர் Thank you very much என்பர். அதைத் தமிழிலே மிச்சம் பெரிய உபகாரம் என்போம். தாய்க்கு நன்றி சொல்லிக்கட்டுமா. இவ்வண்ணம் ஏழை எளியவர்க்கு ஏதேனும் கொடுக்கும்போது நன்றி சொல்வதைப் பார்க்கிறோம். இதை நன்றியுடைமை என ஒரு அதிகாரத்தால் விளக்கியுள்ளார். எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச் செய்ந்நன்றி கொன்ற மகற்கு என்பது வள்ளுவன் கூற்று. எனவே நன்றியுடையவர்களாய் வாழவும் வேண்டும் (நாம்).

துன்பம் துயர் தீர்ப்பவர்க்குப் பிரதியுபகாரமாக மிக்க நன்றியெனக் கூறுகிறோமே இதன் இரகசியம் என்ன?
வேண்டுகிறவன் சொல்லளவிலே நன்றி கூறினும் அவரது பசியை பட்டினியைத் தீர்த்தவருக்கு அது போதாததாக ஒரு எண்ணம்.
எனவே இந்தத் தர்மம் செய்தவனுக்கு அது சென்றடைவது போன்று கொடுப்பவனையே அது சேரும் என்றால் - ஈந்தவனே கொடையாளியே கடப்பாடுடையவன். ஏனெனில் அவன் செய்த தர்மத்தின் பயனை அடைபவன் கொடுப்பவனே, ஆதலின்தான் செய்த நன்றியை உடனே மறந்து - கொடையை அனுபவித்தவன் ஏழை இருந்தபடியாற்றான் இவன் தர்மத்தின் பயனை எய்தியவன் ஆனான். ஆனமையால் நன்றி பாராட்ட வேண்டியவன் அவனே. ஏனெனில் இக்கொடையை ஆற்ற நிலைக்களனாய் இருந்தவன் அந்த ஏழைதான். எனவே "ஆம்பொருள் நமதேயாயின் அறன் பிறர்க்கானது உண் போ" என எழுதி வைத்தனர்.

இந்த அடிப்படையிலேதான் "வலது கை கொடுத்தது இடது கைக்குத் தெரியக் கூடாது" என்ற தத்துவம் பிறந்தது. இதை இப்போ வலது கை கொடுத்தது வலது கைக்கே தெரியக்கூடாது என்ற படிப்பனை எழுந்தது. தன்னிழப்போடு தர்ம கைங்கரியம் ஆற்ற வேண்டும். கொடுத்தவர் அதை உடனே மறந்துவிட வேண்டும். வெளியிலே அதை யாருக்கும் மறந்தேனும் சொல்லக்கூடாது. பேருக்கும் புகழுக்குமாகத் தர்மம் செய்யக்கூடாது.

எனது பிறந்த ஊருக்கு அடுத்த ஊரிலே ஒருவர் இருந்தார். அவர் தர்ம சிந்தனையுள்ளவர். பொருளாதார வசதியும் நிறைந்தவர் கல்விமானும்கூட. பிள்ளை குட்டி இல்லாதவர். தானதர்மம் செய்வார். ஆனால் பிறரறியப் பறையடிக்க மாட்டார். பல பெண்களுக்கு விவாகம் செய்து வைத்திருக்கிறார். படிக்க வசதி இல்லாதவர்க்கும் படிப்பு வசதி செய்வார். வீடு கட்டிக் கொடுப்பார். ஆலயங்களின் நித்தியபூசை தவறாமல் நடக்க ஆவன செய்வார். நோயாளிகள் முதியோர்களைப் பேணுவார். இப்படியான பெரிய மனசு படைத்த தான் செய்த சேவைகளைப் பிறர் அறியாமல், ஆனால் பொதுமக்கள் குறை குற்றம் சொல்வர். அவர் பறவாய் பண்ண மாட்டார். அவரது இலட்சியம் இதுதான்.

வலது கை கொடுப்பது வலது கைக்கே தெரியக்கூடாது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தகவல் 22வது ஆண்டு பூர்த்தி விழா

**தமிழர் தகவல் 22வது ஆண்டு பூர்த்தி விழா கடந்த மாதம் பத்தாம் திகதி பிற்பகல் மூன்று மணி முதல் ஐந்து மணி வரை ரொறன்ரோ அங்கத்தவர் சபா பீடத்தில் சிறப்பாகவும், நேர்த்தியாகவும் இடம்பெற்றது. முதலாவது அமர்வின்போது, விழாவுக்குத் தலைமை தாங்கிய மூத்த எழுத்தாளர் அ. முத்துலிங்கம், வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் இ. பாலசுந்தரம், மலர் வெளியீட்டுரை நிகழ்த்திய கவிஞர் பொன்னையா விவேகானந்தன் ஆகியோரது உரைகளின் சிறு பகுதிகள் கீழே இடம்பெறுகின்றன. முழுமையான சில உரைகள் அடுத்த இதழில் இடம்பெறும்.**

## தலைமையுரை - திரு. அ. முத்துலிங்கம்

தமிழர் தகவல் தொடங்கிய ஆண்டு 1991 என்பதை கவனித்தேன். அந்த வருடம் தான் நான் முதன்முதலாக கனடாவுக்கு வந்தேன். சில நாட்கள் தங்கிவிட்டு திரும்பிவிட்டேன். மறுபடியும் பலவருடங்கள் கழித்து வந்தேன். 1991 களில் நிறையப் பேர் கனடாவுக்கு வரத் தொடங்கிவிட்டார்கள். என்ன செய்வது எங்கே போவது என்று தெரியாமல் பலர் தத்தளித்தனர். ஒருவர் என்னிடம் இந்தப் பனி இவ்வளவு கொட்டுகிறது, அடுத்த வருடமும் வருமா என்று கேட்டார். இன்னொருவர் தன் அகதிக் கோரிக்கையை நிராகரித்து விட்டார்கள், இனி என்ன செய்யலாம் என்றார். ஒருவர் தன்னுடைய அப்பா பெயரைச் சொல்லி அழைக்கிறார்கள், கூச்சமாக இருக்கிறது என்றார். இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் தமிழர் தகவல் சஞ்சிகையில் விடை இருந்தது. சரியான சமயத்தில் வெளிவந்த இந்த இதழ் தமிழர்களுக்கு செய்த சேவை அளப்பரியது. கடந்த 22 வருடங்கள், 264 இதழ்களில் வெளிவந்த தமிழர் தகவல் தருவது புலம்பெயர்ந்த மக்கள் வாழ்க்கை பற்றிய ஆவணம். இதுதான் மெய்யான சரித்திரம். இந்த 22 வருடத்தில் தமிழர் தகவல் 196 விருதுகள் வழங்கி கௌரவித்திருக்கிறது. Dr Tom Clarke, Pam McConnel, Kim Phuc, Miranda Pinto போன்றவர்களுக்கு விருதுகள் வழங்கி பெருமைப்படுத்தியிருக்கிறது. தமிழர் தகவல் இதழை நடத்துவதற்கு நிதியுதவி வெளியே இருந்து கிடைப்பதல்ல. இதற்கு முழு ஆதரவும் தமிழர் சமூகத்தில் இருந்து கிடைக்கிறது. ஏனென்றால் இது அவர்கள் பத்திரிகை. இது பாராட்டுக்குரியது. தமிழர்தகவல் சஞ்சிகையை தொடர்ந்து நடத்திவரும் திரு திருச்செல்வத்தின் உழைப்பும் அர்ப்பணமும் அசரவைப்பது. 22 வருடகாலம் ஒரு சஞ்சிகையை சரியாக 5ம் தேதி கொண்டு வருவதென்பது நினைத்துக்கூட பார்க்கமுடியாத வேலை. இவர் சேவையை பாராட்டி பல விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே மிகச் சிறந்தது 2012ல் அவருக்கு அளிக்கப்பட்ட June Callwood outstanding achievement award. அதற்கு எங்கள் பாராட்டுகள். புறநானூற்றில் ஒரு வாழ்த்து உள்ளது. தமிழில் அதுதான் ஆகச் சிறந்த வாழ்த்து. 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' என்று வரும். எங்கள் வாழ்நாளையும் சேர்த்து அவர் நீடூழி வாழவேண்டும் என உங்கள் சார்பில் வேண்டிக்கொள்கிறேன்.

## வாழ்த்துரை - பேராசிரியர் இ. பாலசுந்தரம்

1980களுக்குப் பின்னர் தமிழ் அகதிகளின் வருகை ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கில் இடம்பெறத் தொடங்கியது. அத்தகைய சூழலில் அவர்களுக்கு இந்நாட்டின் அரசு ரீதியான தகவல்கள், சட்ட ஒழுங்கு விதிமுறைகள், குடியிருப்பு வசதிகள், அகதிக்கோரிக்கை, சமூகநலப்படிகள் முதலான பல்வேறு தகவல்களைத் தமிழில் அறிந்து கொள்ளத்தக்க வாய்ப்புக்கள் இல்லாத ஒரு சூன்ய நிலை காணப்பட்டது. அந்த வெற்றிடத்தை 22 ஆண்டுகளுக்கு முன்னர் நண்பர் திருச்செல்வம் அவர்கள் துணிச்சலுடன் நிவிர்த்தி செய்ய முன்வந்தார். "தமிழர் தகவல்" என்ற மாத இதழை 1991ஆம் ஆண்டு முதலாக வெளியிடத் தொடங்கினார். கனடாவில் தமிழ் ஊடகத்துறையில் மூத்த பத்திரிகை ஆசிரியராகத் திகழும் திருச்செல்வம் அவர்களது 'தமிழர் தகவல்', கனடாவில் புதிதாகக் குடியேறிய தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்களை மாதத்தோறும் தொடர்ச்சியாக வழங்கி வருவதாயிற்று. அரசு - சமூகம் - கல்வி - தொழில் - மருத்துவ வசதிகள் எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நம்பகமான தகவல்களை இச்சஞ்சிகை மக்களுக்கு மாதந்தோறும் தவறாது வழங்கிவந்தது. வெளியீடு என்ற நோக்கில் 1991ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 264 இதழ்களை மாதந்தோறும் குறிப்பிட்ட திகதியில் வெளியிட்டு வருதல் என்பது ஓர் அசுர சாதனை என்றே நான் கருதுகின்றேன். இவை யாவற்றுக்கும் மேலாக ஒவ்வோராண்டின் இறுதியிலும் வெளியிடப்பட்டுவரும் ஆண்டு மலர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கனடாத் தமிழ் மக்களின் வரலாற்றை அறிந்துகொள்ளத் தக்க வரலாற்று ஆவணமாக ஆண்டு மலர்களை அவர் வெளியிட்டு வரும் பணியானது இதுவரை எங்கும் எவரும் செய்யாத சாதனையாகும்.

## வெளியீட்டுரை - கவிஞர் பொன்னையா விவேகானந்தன்

இந்த விழாவுக்கும் ஆண்டு மலர் வெளியீட்டுக்குமான செலவீனங்கள் எந்த ஒரு அரசிடமிருந்தும் பெறப்படுவதில்லை என்பதை உங்களில் பலர் அறிவீர்கள். கடந்த 22 ஆண்டுகளாக சமூகம் சார்ந்த அக்கறையாளரே இந்த விழாவுக்கும் வெளியீட்டிற்கும் உதவி வருகின்றனர். அரசுகளிடமிருந்தோ, அல்லது எந்தவொரு நிறுவனத்திடமிருந்தோ உதவிகள் பெற்று இதனை நடத்துவதில்லை என்பதை ஒரு குறிக்கோளாகவே தமிழர் தகவல் கொண்டுள்ளது. விளம்பரத்தை நோக்கமாகக் கொள்ளாது, இந்த இதழின் சமூகப் பணிகளை மனதிற்கொண்டு மனம் கோணாது உதவும் சமூக அக்கறைமிக்க வணிக முகவர்களும், தொழிற்றுறையாளருமே இந்த நிகழ்வின், ஆண்டு மலர் வெளியீட்டின் பின் பலங்களாவர். இந்த மலரின் பின் அட்டையை உள்ளும் புறமுமாக அலங்கரிக்கும் இவர்களே இந்த விழாவையும் அலங்கரிக்கின்றனர். இன மேலாண்மை மீது அக்கறை கொண்ட இந்தப் பெருமக்களுக்கும் எமது நன்றி. கனடா போன்றதொரு வாழ்புலத்தில், இயல்பாய் எதிர்கொள்ளும் வாழ்வியல் போராட்டங்களோடு, 22 ஆண்டுகளாக ஒரு சஞ்சிகையை வெளியிட்டு வழிநடத்துவது என்பது இலகுவான பணியல்ல, சவால்களை எதிர்கொள்கின்றபோது, பெருமிதம் கொள்ளவல்ல ஆற்றல் மிக்கவர்களாலேயே இது சாத்தியப்படும். தமிழர் தகவலால் இது சாத்தியப்படுத்தப்பட்டிருக்கின்றது. வரலாற்றைப் பதிவாக்கி பதிவை வரலாறாக்கும் பணி எங்களுடையது என்பது தமிழர் தகவலின் குறிக்கோள். அது இம்மியளவும் பிசகாமல் இந்த மலரிலும் நிறைவேறியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22வது ஆண்டு பூர்த்தி 'இளவளர்' மலர் வெளியீடு






ஆரம்ப உரை: திரு. கதிர் துரைசிங்கம் தமிழ் வாழ்த்து: பிரதிஷ்னி மதீஸ்வரன் & லஷ்மி சிவனேஸ்வரலிங்கம்
தலைமையுரை: திரு. அ. முத்துலிங்கம் ஆசியுரை சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்



வாழ்த்துரை:
பேராசிரியர் இ. பாலசுந்தரம்



மலர் வெளியீட்டுரை:
திரு. பொன்னையா விவேகானந்தன்



முதலாவது பிரதி வழங்குபவர்: திருமதி. கனகேஸ்வரி நடராஜா
பெறுபவர் திருமதி. ஜெனனி சிவலிங்கம்



சிறப்புரை:
திரு. பி. விக்னேஸ்வரன்



சிற்றுரை:
முதன்மை ஆசிரியர்

# 22வது ஆண்டு விருது விழா



தலைமையுரை
திரு. நீதன் சண்



ஆரம்ப உரை
டாக்டர் விக்டர் ஜே. பிகராடோ



விருதாளர் அறிமுகவுரை
பேராசிரியர் ஜோ. சந்திரகாந்தன்



விருதாளர் அறிமுகவுரை
அஜந்தி மதனாகரன்



விருதாளர் அறிமுகவுரை
அனோஜினி குமாரதாசன்



விருதாளர் அறிமுகவுரை
சட்டத்தரணி யசோ சின்னத்துரை



விருதாளர் அறிமுகவுரை
குயின்ரஸ் துரைசிங்கம்



ஏற்புரை
டாக்டர் இ. லம்போதரன்



கனடிய தேசிய கீதம்
ஜானகி காந்தரூபன்



பிரதம விருந்தினர் உரை
திரேசா ஆர்ம்ஸ்ரோங்
ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தகவல் 22வது ஆண்டு விருதுகள் வழங்கல்


டாக்டர் இ. லம்போதரன் (முன்னணிச் சேவை விருது)


திரு. பி. விக்னேஸ்வரன் (வாழ்நாள் சாதனை விருது)


எம்.பி. நாகேந்திரன் (கலைத்துறை - நாதஸ்வரம்)


